REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம் — விய — ஆனி கூ, 23-6-'46 — ஞாயிறு | இதழ் 46

JAFFNA COLLEGE LIBRARY JUN 24 1946 VADDUKODDAI, CEYLON

# தாயின் காலடியிற் சேய்!

## உருளிவெள்ளி உருட்டல்கள்

[நமது அரசியல் நிருபர்]

**"இலங்கை ஒரு சின்னஞ்சிறிய தீவு. அது இந்தியாவின் காலடியிற் கிடக்கின்றது. சுதந்திர இந்தியா கணப்பொழுதில் தனது காரியத்தை முடித்துக் கொள்ளும்." இவ்வாறு டொக்டர் காரே இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றிச் சமீபத்தில் தெரிவித்தார். இக்கூற்றுத் தர்மமற்றதென இங்குள்ள சில பத்திரிகைகள் குறை கூறுகின்றன.**

டொக்டர் காரே இந்திய அரசாங்கத்தின் சாம்ராஜ்ய உறவு அதிகாரியாகக் கடமை பார்ப்பவர். பொறுப்பு வாய்ந்த பதவியை வகிப்பவர். இங்குள்ள இந்தியத் தலைவர்கள் எவ்வளவு தூரம் தவறான செய்திகளை இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு டொக்டர் காரேயின் விளக்கம் போதுமானது. "இந்தியர் விஷயத்தில் தென்னுபிரிக்கப் பிரதமர் ஸ்மட்ஸ் விளைக்கும் அநீதியிலும் பார்க்க இலங்கை கொடுமை செய்ய முயலுகின்றது" எனவும் டொக்டர் கூறுகின்றார். இது விஷமப் பிரசாரத்தின் விளைவன்றி வேறொன்றுமல்ல. தவறான இப்பிரசாரங்களை எதிர்த்து உண்மையான நிலைமையை இந்தியாவுக்கு எடுத்துக் காட்டுதல் அவசியமென மந்திரி சபை தீர்மானித்திருக்கின்றது. இங்குள்ள இந்தியத் தலைவர்கள் நிகழ்த்தும் அரசியற் சண்டித்தனங்களை இந்தியப் பத்திரிகைகள் உணர முடியாத காரணத்தாற் காரசாரமான தலையங்கங்களை எழுதுகின்றன. "சேனநாயகாவின் அக்கிரமம்" என்ற தலைப்பில் சென்னை தினசரி பின்வருமாறு எழுதுகின்றது. "டொக்டர் காரே சொல்லுவதைப்போல தென்னுபிரிக்காவின் ஜெனரல் ஸ்மட்ஸைத் தோற்கடிக்கக்கூடிய மாதிரியில் இலங்கை மந்திரி சேனநாயகா நடந்துகொண்டு போகிறார். இந்தியர் மீது அவ்வளவு துவேஷம் அவருக்கு இருக்கிறது......... இலங்கையிலிருந்து ஒரு இந்தியரை சேனநாயகா வெளியேற்றினாலும் சரி, உடனே இந்தியாவிலுள்ள சகல இலங்கையர்களையும் அடுத்த விநாடியே இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும். அப்புறம் இந்தியாவுக்குள் நுழைவதற்கே எந்த இலங்கையருக்கும் அநுமதி கொடுக்கக் கூடாது. இந்தியாவிலிருந்து எவ்வித சரக்குகளும் இலங்கைக்குப் போகவிடாமல் தடுக்க வேண்டும். அப்புறம் இலங்கையிலுள்ள இந்தியரை வெளியேற்ற சேனநாயகா உத்தரவு போட்டால் கடைசியாக ஒரு வழியை இந்திய சர்க்கார் கைக்கொள்ள வேண்டும். 5 வருஷங்களுக்கு மேலாக இலங்கையில் வசித்த இந்தியரை இலங்கை பிரஜைகளாக்க சேனநாயகா மறுத்தால் இலங்கையிலுள்ள 7 லட்சம் தொழிலாளரையும் இந்தியாவுக்குத் திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டும்......... இலங்கைத் தோட்டங்கள் எப்படிப்போனால் நமக்கென்ன?......வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் அந்த நாடுகளில் பிரஜைகளாகிச் சம உரிமைகள் பெறுகிற வரையில் அவர்களுடைய நன்மையைக் காப்பாற்ற வேண்டியது இந்திய சர்க்காரின் கடமை. எனவே, சேனநாயகாவின் உருட்டல்களைச் சரியான விதத்தில் அடக்குவதற்கான முறைகளை இந்திய சர்க்கார் உடனே கைக்கொள்ள வேண்டும்."

### போலித் தலைவர்கள்

இங்குள்ள இந்திய வர்த்தக அதிகாரிகளும் போலி அரசியற் புலிகளும் தங்கள் நன்மையை இலக்காகக் கொண்டு தெரிவிக்கும் தவறான செய்திகளை இந்தியாவில் உள்ளவர்கள் நம்புவதால் இப்படியெல்லாம் எழுதுகின்றனர். இலங்கை வகுப்புவாதத்துக்கு இரையாகுவதைக் கண்டித்ததுடன் நில்லாது சமபலப் பிரதிநிதித்துவம் விரும்பத்தக்கதல்லவென்றும் அழுத்தந் திருத்தமாகச் சென்னை தினசரி எழுதியது. இலங்கை அரசியல் விஷயங்களை அலசி ஆராய்ந்து நிதானமாக எழுதும் இப்பத்திரிகை இலங்கை இந்தியர் விஷயத்திற் கிடைத்த செய்திகளை அஸ்திவாரமாகக் கொண்டே தலையங்கம் தீட்டியிருக்கின்றது. இத்தனைக்கும் இங்குள்ள இந்தியத் தலைவர்களையும் இலங்கை அரசாங்கத்தையுமே குறை கூற வேண்டும். இலங்கைக்கு எதிராக இந்தியாவிற் பிரசாரம் நிகழ்வதையறிந்தும் இலங்கை அரசாங்கம் அவற்றை எதிர்த்து உண்மையை நிலைநாட்ட இன்னும் முயற்சிக்கவில்லை. இந்நிலையில் இலங்கைத் தோட்டத் துரைமார் சங்கத் தலைவரும், இலங்கைத் தோட்ட நிர்வாகஸ்தர்கள் சங்கத் தலைவரும் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையை ஆராயவேண்டும். தோட்டத் துரைமார்கள் கூறுவதெல்லாம் தேவவாக்கென ஒருவரும் கருதவேண்டியதில்லை. ஆனால் இந்தியத் தொழிலாளர் இப்பொழுது அனுஷ்டிக்கும் ஹர்த்தாலின் மூல காரணத்தை அறிவது அவசியமாகின்றது. உருளிவெள்ளித் தோட்டச் சம்பவமானது உண்மையில் இந்தியத் தொழிலாளரிடையில் உணர்ச்சி வேகத்தை யூட்டி வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தி இங்குள்ள சகல இந்தியர்களுக்கும் அரசியல் உரிமை வழங்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கமாகவே இலங்கை இந்தியக் காங்கிரஸ் காரர்களால் ஒரு காரணமாக எடுத்தாளப்படுகின்றது. உருளிவெள்ளித் தோட்டத்தை அங்குள்ள கிராமவாசிகளைக் கொண்டு கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் ஒரு திட்டம் அமைத்திருக்கின்றது. இதில் இந்தியத் தொழிலாளர்கள் இடம்பெறவில்லை. இதுதான் ஹர்த்தாலுக்கு முதற்காரணம். இத்திட்டத்தின்படி அங்குள்ள கிராமவாசிகளே உருளி வெள்ளித் திட்டத்தில் உரிமையுண்டு. உதாரணமாக மாத்தளைப் பகுதியிலோ, அன்றேல் வட இலங்கையிலோ வதியும் கிராமவாசிகள் உருளி வெள்ளித் தோட்டத்திற் பங்கு பெற முடியாது.

### நேருஜி கருத்து

இந்தியத் தொழிலாளர் இலங்கைக் காடுகளைத் திருத்தி பொன் கொழிக்கும் பூமியாக்கியிருக்கின்றனர் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால் இங்குள்ள சகல இந்தியர்களும் இலங்கை மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் வேண்டுமென வாதாடுவது நியாயமாகாது. பண்டித ஜவஹர்லால் நேரு கூறுவதுபோல, "இந்தியாவின் பிரஜைகளாகவே தொடர்ந்து வாழும் விருப்பத்தைத் தெரிவிக்க இலங்கையிலுள்ள இந்தியருக்கு உரிமை இருக்கவேண்டும். இத்தகையோர் இலங்கையின் நிரந்தரபிரஜைகளுக்குரிய உரிமைகளையும் சலுகைகளையுங் கேட்பது தவறு. இவர்களைத் தவிர ஏனைய இந்தியர் ஐந்து வருடகாலம் அல்லது அதற்குக் கூடுதலான காலம் இலங்கையில் வந்தால் அவர்கள் இலங்கையைத் தாயகமாகக் கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்த மாத்திரத்தில் இலங்கை மக்களுக்குரிய பூரண உரிமைகளையும் அந்தஸ்தையும் பெற அவர்களுக்கு வசதி அளிக்க வேண்டும்." இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு இந்தியத் தொழிலாளர் செய்த அரும் பணியைக் கருதி இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு அதிகமாக வசித்து வருபவர்கள் இலங்கையைத் தாயகமாகக் கொள்ள உண்மையாகவே விரும்பினால் அவர்களுக்குப் பிரஜா உரிமை வழங்கவேண்டியது நியாயமாகும். அப்படியன்றி இலங்கையைச் சுரண்டும் அத்தனைபேரும் அரசாங்கத்தைப் பயமுறுத்தி வெளியுலகுக்கு அபாண்டப் பொய்களைக் கூறி உரிமைகளைப் பெறத் துணிவதை நாகரீக உலகம் விரும்பமாட்டாது.

## நேருஜி கைது



இந்திய காஷ்மீர் மன்னனின் [illegible] யான வீரனின் வியாக்கை [illegible] 5-ம் பக்கத்திற் காண்க.

## இந்திய கலாசாரத் தொடர்பு

### உண்மை என்ன?

உருளிவெள்ளித் தோட்ட விஷயமாக நிகழ்ந்துவரும் சம்பவங்கள் வகுப்புவாதப் பூசல்களையும் சமூகப் பிளவுகளையும் இலங்கையிலே தூண்டுகின்றன. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நிலவும் நல்லெண்ணத்தையும் நட்பையும் பங்கப்படுத்துகின்றன. இலங்கையிலும் கீழைத் தேசங்களிலும் ஏகாதிபத்தியம் சதா நிலவுவதை விரும்பும் பிரிட்டன் இந்தியா இலங்கையுடன் தாயும் சேயும்போல் வாழ்வதை ஒருபோதும் சகிக்கமாட்டாது. இலங்கைவாழ் இந்தியர்கள் இதை உணர்ந்தும் போயும் போயும் பிரிட்டனின் வலைக்குட் சிக்கிக் கொள்ள முயலுகின்றனர். தங்கள் நிலை தர்மத்தின் பாற்பட்டதென்பதை இலங்கை மக்களுக்கு உணர்த்துவதற்கான வழிவகைகளைக் கையாளாது விஷமப் பிரசாரங்கள் மூலம் உரிமைகளைப் பெற முயலுகின்றவர், ஸ்ரீ தொண்டமானும் அவருடைய சகாக்களும்.

### சுதந்திர இந்தியா

இங்குள்ள சிங்களத் தலைவர்கள் இந்தியாவை உதறித் தள்ளிவிட்டுப் பிரிட்டனுடன் இனிமையாக வாழ்வதே மேலெனக் கருதுகின்றனர்! இலங்கை பிட்டனுக்குச் சதா அடிமையாக விருப்பதைச் சுதந்திர இந்தியா விரும்பமாட்டாது. இந்நிலை இந்தியாவுக்கும் ஆபத்தானது. இலங்கை பூரண சுதந்திரம்பெற முயற்சிக்க வேண்டும். டொமினியன் அந்தஸ்து மட்டும் போதாது.

இலங்கை அரசாங்கமும், இங்குள்ள சிங்களத் தலைவர்களும் உருளிவெள்ளித் தோட்ட விவகாரங் குறித்து அமைதியை இழந்துவிடக்கூடாது. சின்னத்தனமாகவும் நடக்கக்கூடாது. "பிரீ இந்தியா" என்ற தென் இந்திய ஆங்கில வாரவெளியீடு 16-6-46 இதழிற் பின்வருமாறு எழுதுகின்றது. "இலங்கை இந்தியாவுக்குப் பக்கத்தில் இருப்பது. அதன் மக்கள் இந்தியருக்கு அந்நியரல்லர். ஆண்டுக்கணக்காக நிலவும் கலாசாரத் தொடர்பும், தத்வ ஞான

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

# கல்வி உலகிற் கலக்கம்

## சம்பளத் திட்டத்தின் விளைவு

[நமது கல்வி நிருபர்]

**ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்காகச் சகல ஆயத்தங்களுஞ் செய்வதைக்கண்டு அரசாங்கம் உண்மையாகவே பயப்படுகின்றது. சத்தஞ்சந்தடியின்றிக் காரியம் பார்த்துவிடலாமெனச் சம்பள விசாரணைச் சபையினர் நம்பியிருந்தார்கள். ஆனால் தங்கள் கௌரவத்துக்குப் பங்கம் நேர்ந்திருப்பதை உணர்ந்து அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக ஆசிரியர்கள் செய்யும் முயற்சிகள் அரசாங்கசபை அங்கத்தினரைக்கூட நடுநடுங்கச் செய்கின்றன!**

ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யத் தயார். இதை அரசாங்கம் இனி அசட்டை செய்ய முடியாது. ஆசிரியர்களாக இருப்பவர்கள் ஏனைய தொழிலாளர்களைப்போல 'வேலை நிறுத்தம்' என்ற ஆயுதத்தைப் பிரயோகிக்கத் தலைப்படுதல் சங்கைக் குறைச்சல் எனக் கொழுத்த சம்பளம் பெறும் அநேக அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பஸ்நிலையங்களிலும், ரயில் பெட்டிகளிலும் பேசிக்கொள்ளுகின்றனர். இவர்கள் ஆசிரியர்களின் கஷ்ட நஷ்டங்களை அறியாது பேசும் பேர்வழிகள். மரியாதையான முறைகளைக் கையாண்டு, படுதோல்வியடைந்தபின்னர்தான் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யத் துணிவார்கள் என்று அறிகின்றேன். நாட்டிலுள்ள பெரிய கல்லூரி ஆசிரியர்கள் உணர்ச்சியுடன் ஓடி ஆடித் திரிவதைப் பார்க்கும்போது படித்துப் பட்டங்கள் பெற்ற மனுஷருக்குமா இந்தத் தலைவிதி என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. வேலை நிறுத்தம் நிகழுமாயின் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு இடையூறு ஏற்படுவதுடன் அரசாங்கமும் செய்வது யாதெனத் தெரியாது திகைக்கவேண்டி நேரிடும்.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால், மறியற்காரரின் உதவியை நாடி நிலைமையை ஒருமாதிரிச் சமாளித்துக்கொள்ளலாம். ஆசிரியர்கள் இல்லையே! என்று சொல்லிக் கந்தரையும் ஹூஜ்ஜியாரையுங் கொண்டு வந்து பாடஞ் சொல்லுவிக்க முடியாது. ஆசிரியர்கள் அத்தனைபேரும் அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களாகவிருக்கவேண்டுமென்பதை வரையறை செய்யும் அரசாங்கம் அவர்களின் சம்பள விஷயத்திற் பாரபட்சமாக நடந்து கொள்வது மகா பாதகமாகும். ஆசிரியர்களுக்குச் சம்பள விஷயத்தில் அரசாங்கம் நீதிவழங்க வேண்டுமென்ற பேச்சு அநேககாலமாக இருந்துவருகின்றது. இதுவரை எந்த விசாரணைச் சபையும் அவர்களின் விஷயத்தில் அக்கறை எடுக்கவில்லை. போதாக்குறைக்குச் சம்பள விசாரணைச் சபை வகுத்திருக்குந் திட்டம் அவர்களின் உள்ளங்களையெல்லாம் தகர்த்தெறிந்திருக்கின்றது.

### பொறுக்க முடியாது

தகுதியற்ற அநேகர் கொழுத்த சம்பளம் பெற்றுக் குசாலாகக் காலங்கழிக்கின்றனர். ஆனால் அதிக பணஞ் செலவு செய்து ஆசிரியர்களாக வேலை பார்ப்பவர்களின் கதி என்ன? அவர்கள் கொடுத்து வைக்காத பிறவிகள்! சீனியர் சோதனையிற் தேர்ச்சி யடைந்த ஒருவர் அரசாங்க உத்தியோகம் பார்ப்பதாகில் அவருக்குக் கை நிறையச் சம்பளம். அத்துடன் போலிக் கௌரவமும. அதே தராதரம் வாய்ந்த வேறொருவர் ஆசிரியராகக் கடமை பார்ப்பதாகிற் 'பிச்சைச் சம்பளம்' பெற்றுத் திண்டாடவேண்டும். எத்தனையோ திறமைவாய்ந்த ஆசிரியர்கள் சட்டம்பித் தொழிலை விட்டு வேறு அநேக உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். இது காரணமாகச் சிறந்த அறிஞர் கல்வி உலகைத் துறந்து அதிக சம்பளங் கிடைக்கும் இலேசான வேலைகளுக்கு அடிமைகளாகிக்கொண்டு வருகின்றனர். இத்தகைய அருவருக்கத்தக்க நிலையை ஏற்படுத்தியிருக்கும் அரசாங்கம் கல்வியின் உயர்வைக் கணிக்கவில்லையென்றே கூறவேண்டும். காற்றை உட்கொண்டும் முகிலைத் துகிலாக உடுத்தும் வாழ்க்கையை நடத்தும் சக்தியை ஆசிரியர்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 2327

சுளிபுரம்
சரவணமுத்து மாரிமுத்து கைம்பெண் சரஸ்வதி.
வழக்காளி

சுளிபுரம்
முருகேசர் ஆசைப்பிள்ளை (காலஞ்சென்ற அம்பலவாணர் சுப்பையா கைம்பெண் தெய்வானைப்பிள்ளையின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 392-ம் இலக்கத்தத்துவ வளக்கில் தத்துவகாரன் என்றமுறையில்),
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 2327-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி, 1946-ம் ஆண்டு ஆடி(ஜூலை) மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10½ மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:—** முதல் வட்டி ரூபா 2143-37ம், இதில் ரூபா 1300/க்கு 12-10-45 திகதி தொடக்கம் 15-1-46 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 166-40 சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரமிறை "கன்சம்பத்தையும், வசந்தானிப் புலவும், புளியொல்லையும்" நிலப்பரப்பு ஆறு (6)ம், வீடும், பனைகள் வடலிகளும், செய்பயிர் வான்பயிர்களும், கிழக்கெல்லையில் இருக்குங் கிணற்றிற் பங்கும். எல்லை: கிழக்கு, நல்லதம்பி சுப்பிரமணியத்திற்கும் பெண் வள்ளியாச்சிக்குமுரிய ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, நாகநாதர் கைம்பெண் வள்ளியம்மைப்பிள்ளையின் ஆதனம். தெற்கு, கணபதிப்பிள்ளை தம்பையாவின் ஆதனம். இதடங்கலும். முற்பதிவு E $\frac{213}{252}$

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
12.6.46

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 1338

தெல்லிப்பழை மேற்கு
சுப்பர் பூதப்பிள்ளை
வளக்காளி.

தெல்லிப்பழை மேற்கு
1. தம்பிப்பிள்ளை சிதரம்பரப்பிள்ளை
2. பொன்னம்பலம் மகள் இராசம்மா
எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில் 1338-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை, 1946-ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 17-ந் உ புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் முறையே 2-ம் காணியை, காணியின் அருகாமையிலுள்ள பகிரங்க ஒழுங்கையில் முதலாவதாகவும்; அடுத்ததாக 1-ம் காணியை, 1-ம் காணிக்குள் நின்றும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை :-** முதல் வட்டி ரூபா 678/-ம், இதில் ரூபா 500/-க்கு 22-5-44 திகதி தொடக்கம் 19-12-45 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 9வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூ. 212-35சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை "விதாரனை வயல்" நெற்பரப்பு 5½ உறுதிப்படி. ஆட்சிப்படி நெற்பரப்பு 1¾ மேலதிகம், இரண்டும் சேர்ந்து நெற்பரப்பு 7¼-ம் எல்லை: கிழக்கு; தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தின் ஆதனம். வடக்கு. விசுவநாதர் பெண் வள்ளிப்பிள்ளைக்கும், சின்னக்குட்டி கதிரிப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, சிதம்பரப்பிள்ளை பெண் சேதுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு, தம்பிப்பிள்ளை சின்னத்தம்பியின் ஆதனம். இதடங்கலும் இன்னும் கிழக்கே வயித்திலிங்கம் பெண் சின்னாச்சிப்பிள்ளையின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

2. மேற்படி தெல்லிப்பழை மேற்கிறை "சோடக்கன்" நிலப்பரப்பு 7-ம். குளி 4¾-ம். செய்பயிர் வான்பயிர்களும் எல்லை: கிழக்கு, சுவான் பெண் ஆரோக்கியத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, கனகசபை காசிநாதரின் உருமைக்காரருக்கும், தம்பிப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும், நன்னியர் பெண் மீனாட்சிப்பிள்ளையின் உருமைக்காரருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு, நன்னியர் பெண் மீனாட்சிப்பிள்ளைக்கும், மூன்றுமுழ அகலமுள்ள பாதை முகப்பும், தம்பிப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்கும். தெற்கு, தம்பிப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் பங்காளருக்கும், சுவாம்பிள்ளை பெண் ஆரோக்கியத்திற்கும் பங்காளருக்கு முரிய ஆதனங்கள். இதடங்கலும்.

Sinnathamby Sangarappillai
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை.
26-5-46

## 249-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**மேல்மாகாணத்தில் சில்லறை வியாபாரிகட்குப் புடவைகள் பங்கீடு செய்தல்**

**1946-ம்** ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி துவக்கமாக கொழும்பு நகராண்மைக் கழகத்துக்கு (முனிசிப்பாலிட்டி) வெளியே உள்ள மேல்மாகாணத்திலுள்ள சில்லறை வியாபாரிகளும் பொட்டணி வியாபாரிகளும் மாகாண மொத்தவியாபாரப் பங்கீட்டுத் திட்டத்தினுட் சேர்க்கப்பட்டு கொழும்பு நகரத்தில் தங்கள் தேவைகளை (சப்ளை)ப் பெற்றுக்கொள்வார்கள். எந்த மொத்த வியாபாரிகளிடமிருந்து அவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வேறு அறிவித்தல் வெளியாக்கப்படும்.

2. கொழும்பு நகரமொத்த வியாபாரத் திட்டப்படி ஒன்று இரண்டுகிழமை கொண்டகாலமாகும். அக்காலத்தில் முதல் ஞாயிறுவுந் திங்களும் மொத்த வியாபாரம் அடியோடு கிடையாது. முதலாஞ் செவ்வாய் புதன் வியாழக் கிழமைகளில் கொழும்பு நகரத்திலுள்ள சில்லறை வியாபாரிகட்கு மாத்திரம் விற்கப்படும். வெள்ளிக்கிழமை துவக்கம் அடுத்த கிழமை முடிய மாகாண மொத்த வியாபாரிகள் மாத்திரம் கொழும்பு மொத்த வியாபாரிகளிடம் வாங்கலாம்.

3. இத்திட்டப்படி முதலாவது ஈர்வாரம் ஜூன் மாதம் 16-ந் திகதி தொடங்கி ஜூன் 29-ந் திகதி முடிவாகும்.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 12-6-1946 [2802]


# புகையிலை

**புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்**

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்துவருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

**COLOMBO COMMERCIAL CO., LTD.**

Incorporated in Great Britain
Liability of Members Ltd.

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வென்ற 'சுதந்திரம்'

மு. கோவிந்தசாமி
(அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

உலக முழுதிலும் உரிமைக் குரல் முழங்குகின்றது. அடிமை நாடுகளை மட்டுமன்றி, உரிமை நாடுகளையும் அடிமை மனப்பான்மையினர் ஆள்கின்றனர். ஆதலின் உலகமே அடிமையை வெறுக்கின்றது; உரிமையை விழைந்து வரவேற்கின்றது.

தமிழ் நாட்டிலும் வேட்கை: கிளர்ச்சி; போர். இந்நிலையில் உரிமையைப்பற்றி ஆராய வேண்டிய கட்டாயமாகின்றது. பண்டு, யவன நாட்டையும் வென்ற ஆற்றல் படைத்த தமிழர் எங்ஙனம் உரிமையை (சுதந்திரத்தை) வென்றனர் என்பதை அறிந்தால் இன்று நமது உரிமைப் போருககுப் பெரிதும் துணையாகுமல்லவா?

தமிழ் நாகரீகமாகவே விளங்குவது திருக்குறள். அதனில் 'உரிமை' (அ) அதன் பொருள்படும் வேறு தலைப்பு இவற்றின் கீழ் யாதும் பேசப்படவில்லையே. அப்படியானால் தமிழரிடம் உரிமையோ, அடிமையோ இல்லையா? அல்லது அவற்றின் மனப்பான்மைதான் இல்லையா? இல்லை, அபபடி நினைப்பதே பிழையாகும். தமிழர் வாழ்வே அகம் (இல்லறம்) புறம் (அரசியல்) என்ற இரு பெரும பகுதிகளைக் கொண்டதாகும். அதினும், புறவாழ்வைப்பற்றியே தெளிவாகவும், மிகுதியாகவும் வள்ளுவர் பேசுகின்றார். ஆம். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று தானே புறநானூறு பேசுகின்றது!

இங்ஙனம் அரசியல் வாழ்வினைப் பெரிதும் போற்றிய தமிழர் குறளில் ஏன் 'சுதந்திரம' (உரிமை) என்ற தலைப்பில் பேசவில்லை? ஆனால் அடிமை, உரிமையென்ற சொற்கள் அங்கு காணப்படுகின்றன.

*மடிமை குடிமைக்கண் தங்கின்தன்*
*ஒன்னார்க்கு*
*அடிமை புகுத்தி விடும்.*
*வினைக்குரிமை நாடிய பின்றை*
*அவனை*
*அதற்குரிய னாகச் செயல்.*

என்ற குறட்பாக்களை ஆராயுங்கள். இவற்றால் அடிமை, உரிமை பற்றிய உணர்வு அன்று இருந்தமை யறிகிறோம். ஆனால அன்றைய தமிழகம் வேறு பண்பாடுடைய எந் நாட்டிற்கும் அடிமைப்பட்டதில்லை. ஆகலின் அரசியலில் 'அடிமை'யைப் பற்றிய உணர்வும், கொதியும் ஆங்கில்லை. அதைப்பற்றி முதன்மை கொடுத்து எழுத வேண்டிய தேவையுமில்லை! அடிமையிருந்தால்தானே அடிமையையும் அதற்கு மாறான உரிமையையும் ஆராயவேண்டிவரும்!

அப்படியானால் தமிழ்நாட்டில் நடந்த மிகுதியான போர்கள் எக்காரணங்களையுடையன? எனக் கேட்கலாம். தம் குடும்பச் சண்டைகளே அவை. புகழ், தலைமை, நீதியை நிறுத்தல் இவற்றிற்காகவே நடந்த அண்ணன் தம்பி தகராறுகள் அவையெனலாம். இன்று ஒவ்வொரு நாட்டிலும் நடக்கும் உள்நாட்டுப் போர், கட்சிச் சண்டைகள் அத்தகையனவே. அவற்றை உரிமைப் போர் (பிறநாட்டை யெதிர்த்து) எனக் கூற முடியுமா? இன்று 'அடிமை' யென்ற சொல், பிற நாட்டின் அரசியலின்கீழ் வாழ்தல் என்ற எண்ணத்துடனேயே குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் அன்று, தனிப்பட்டோர் அடிமை வழங்கியிருந்தது. 'அடியோர் பாங்கினும், வினைவல பாங்கினும்' என்ற தொல்காப்பியர் இலக்கணமே இதனை வெளிப்படுத்துகின்றது. கிரீஸில், பிளேடோ 'அடிமையினம்' என்ற தோர் மக்கட் பிரிவையே அரசியலில் வகுத்த காலந்தானே அது. 'அடியோர் பாங்கினும்' என்ற தொடரை விளக்க வந்த பேராசிரியர்-நச்சினார்க்கினியர் உரையிலிருந்து, அடிமைப்பட்டோர், "தமக்குரியரல்லாமையால் (தம் சுதந்திரத்தைப் பிறரிடம் விட்டிருப்போர்) மனிதன் வாழ்வில் பொருளாதாரத்திலும் இன்பத்திலும் உயரும் கடமைகளைச் செய்ய இயலாதென்பதனை" அறிந்திருந்தனரென்பதனையும், அடிமை ஓர் நாட்டின் வாழ்வையே அழித்துவிடுமெனக் கண்டிருந்தனரென்பதையும் உணர இடமிருக்கின்றது.

'பட்டினப்பாலை' என்ற தமிழ் நூலில், கரிகாலன் பகைவரிடம் சிறைப்பட்டிருந்ததை 'சிங்கத்தைக் கூண்டில் அடைத்தது போல' எனக் கூறப்படுதலால், உரிமை சிங்கம்போன்ற வலிமை, தலைமை பெருமையுடைய தெனவும், அடிமைத்தனம் அதனை வளரவிடாமல் அழித்தாற்போன்றதெனவும் தெளிந்திருந்த அன்றை மக்கள் மனநிலையினைக் காண்கிறோம்.

மற்றும் அரசனை, "பொதுவெனப் பொறாஅ" இயல்புடையவன் என்று புறநானூறு முதலாம் நூல்கள் பேசும். அதன் கருத்து, உலகையெல்லாம் தானேயாளவேண்டும், பலர் ஆளுவதனைப் பொறுக்க முடியாது என்ற உள்ளமேயாம். அப்படியானால் இன்றுபோலப், பிற நாடுகளையும் அடிமைப்படுத்திச் சுரண்டுவதற்கல்ல. ஆனால் நீதியற்றவிடத்தில் அதனை நிறுத்தவும், மக்கள் நிலையை மேலும் தன்னாட்டளவு உயர்த்தவும் அவ்வாறுடன் தலைமை, புகழுக்காகவுமே அத்தகைய மனப்பான்மையை அவர்கள் கொண்டிருந்தனரெனலாம்.

"ஓம்பா, மெலியார் மேன் மேக பகை" என்ற குறளில் இக்கொள்கையே விளங்குகின்றது. சில நாடுகளை அவற்றின் உடன்பாட்டுடன் சில காலம் பிறநாடு ஆளவேண்டிய நிலை உலக அரசியலில் ஏற்படலாம். ஆனால் அதனை முன்னேற்றவன்றி அதனைச் சுரண்டி அடிமையாக்கி அழிக்கவல்ல வென்பதனைக் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய இங்கிலாந்தும், அமெரிக்காவும் இந்த இலக்கணத்துடன் எவ்வளவு பொருந்தும்? மற்றும் தகுதியுள்ள மக்களின் விருப்பத்திற்கு மாறாக அடிமையாக்குவதோ, உரிமையளிக்காமல் அவர்கள் உணர்ச்சியை யழிப்பதோ மேற்கண்ட குறளில் அமைந்த தமிழர் நாகரீகத்திற்குப் புறம்பானவையாகும்.

இந்த முறையில்தான், யவனநாட்டைச் சேரர் வென்றது (பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம்) மலயம், சாவகம் முதலியவற்றின் வெற்றி ஆயவற்றால் தமிழ் மன்னர் ஆட்சி ஓங்கியிருக்க வேண்டும் எனவறிகிறோம். சிலவிடங்களில் வென்ற புகழுடன் நின்று, நாட்டை உடனே அம்மக்களிடம் விட்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இன்று உலகம் இல்லையே! வருங்கால உலக 'தர்மகர்த்தா' ஆட்சி இக்கொள்கையில் உருவாகுமா? இன்று தோற்ற ஜெர்மனியிலும், ஜப்பானிலும் விளங்குகின்றதுதே!

தனிப்பட்டோரை அடிமையாக்கித் தம் வினைகளைச் செய்யப் பயன்படுத்திய வழக்கினைக் குறிப்பிட்டேன். அதே போல தனிவாழ்வில் விடுதலையை வேண்டியுழைத்த வகையினையும் நாம் எங்கும் அறிகிறோம். அதுதான் மனதை அறியாமைக் கட்டிலிருந்து விடுத்து மெய்யுணர் வெய்தும் பேரின்ப நிலையும், மனதை ஆண்டவனிடமே ஒப்படைத்துத் தன் விருப்பத்துடன் அவனுக்கடிமையாகி உரிமையுற்று விளங்கும் அறிவு வாழ்க்கையும் ஆகும். திருமாலுக்கு, "அடிமைத்தொழில் பூண்டாயே" என மனதைப் பார்த்து ஆழ்வார் பேசுவர். இன்றைய அடிமையை அதனுடன ஒப்பிடக்கூடாது. ஆண்டவனுக்கு, நாமே விரும்பி அடிமையர்கிறோம். இன்றைய அடிமை நம் விருப்பத்திற்குமாறானதால் வெறுக்கிறோம். இரண்டும் ஒன்றா? பிறருடைய ஆணையின்றி ஆனால் தாமே வகுக்கும் கட்டுப்பாட்டிற்கடங்கி வாழ்வதுதானே சுதந்திரம்! கட்டற்று மனம் போனபடி திரிவதல்ல. அது பேய்த்தனமாய்விடும்! அத்தகைய சங்ககால மெய்யுணர்வு வாழ்வும், இடைக்கால சமய வாழ்வும் (ஆண்டான் அடிமை) அறிவு உரிமையுற்று உண்மையான விடுதலையையும், இன்பத்தையும் அடைவதற்கே தாமே வகுத்த கட்டுப்பட்ட உரிமை வாழ்வாகும். அப்போதுதான் தனிமனிதன், அதன் வழி தனிமனிதர் கூடிய நாடு, உரிமையும், அமைதியும் பெறும். இத்தகைய தனிமனித ஆற்றல் வளர்வதைப் பொறுத்ததே ஓர் நாட்டின் விடுதலைப்போர் வெற்றி. கூட்டத்தின் வழியும், பெருங் கழகங்கள் வழியும் ஒரு நாட்டின் உண்மையான, முடிந்த வலிமையை அளவிடுவது அருமை. ஆதலாற்றான் காந்திஜி நிர்மாணத்திட்டம், சத்யாக்கிரகம் இவற்றின் வழி தனிமனிதரின் ஆற்றலை அளக்கிறார்; வளர்க்கிறார். வள்ளுவர் வழியும் அத்தகையதுதான்.

(தொடரும்)

## உலக் சாபம்

க. திருநாவுக்கரசு

பஞ்ச பாதகங் கொண்டவர் தொல்லைப்
பாரையா ளுதல் நீதியோ
அஞ்சி யஞ்சி அரசு புரியும்
அரிய மன்னர்கள் வேண்டுமே.

மலினம் நிறைந்து மடமை மிகுத்து
வஞ்சஞ் செய்யும் சாதிகள்
புலினம் போல வளர்த்தே யெம்மைப்
புரிகிறார் பல தீமைகள்.

எமக்குச் சொந்த மேது மிங்கே
இல்லை இல்லை இல்லையே
தமக்குச் சொந்த மென்றே இற்றில்
சதிகள் செய்யத் துணிவரோ.

யுத்த கட்டக் கிடங்கு தூர்க்க
யுக்தி செய்யத் தொடங்குறார்
மெத்த மெத்த ஏழையும் வரி
விதிக்கு ளடங்கும் என்கிறார்.

உணவும் உடையும் இன்றி வாடி
உயிரைப் போக்கும் ஏழைகள்
திணறித் திரியும் இராக்கதற் கிறை
தீர்த்து வாழ்வ தெப்படி?

வெட்டை நிலமும் பூத்துக். காய்த்து
வினை வளிக்க வேண்டுமாம்
இட்ட மின்றேற் சட்ட மாக
இக வரசுக் கென்கிறார்

உலக பாரந் தாங்கு மன்னர்
யுக்தி யிற்சிறு பிள்ளைபோல்
உலைவை ஆக்கும் யுத்தம் மூட்டி
உலக சாபந் தேடுறார்.

# கவிதையின் காதை

ந. பிச்சமூர்த்தி

ஒருசமயம் நான் இருந்த ஊரில் நல்ல மழை பெய்து ஓய்ந்திருந்தது. வெள்ளை வைத்த சுவற்றைக் கழுவி விட்டதுபோல் வெளியெங்கும் பிரகாசமாயிருந்தது. எதுவோ ஒரு குடைச்சல் என்னை வெளியே தாத்திற்று. தெருவெல்லாம் தாண்டிச் சென்றேன். மதுரைவீரன் கோயிலண்டை ஒரு குளம் உண்டு. பால் வற்றிய மடியைப்போல் வரண்டிருந்த குளம் அப்பொழுது நிரம்பிச் சுரந்திருந்தது. ஒரு வாய்க்கால் வழியாக வந்த மழை ஜலம் வைரப் பாலம்போல் குளத்தில் கொட்டிக்கொண்டிருந்தது. இந்த நீர் வீழ்ச்சியில் கலவரமடைந்த மீன் குஞ்சுகள், மழைக்கிடையே தோன்றும் மின்னல்கள் போலக் குளத்திலிருந்து துள்ளி வாய்க்காலிற் பாய்ந்து கொண்டிருந்தன. நெருங்கிப் பார்த்தேன். மீன்கள் நீரோட்டத்தை எதிர்த்து நீந்திச் சென்றுகொண்டிருந்தன. என்னவோ தோன்றிற்று. குளத்தங்கரையின் மற்றொரு புறத்தில் வடிகால் வழியாகத் தண்ணீர் ஓடும் இடத்தைப் போய்ப்பார்த்தேன். ஒட்டத்தோடு ஒரு மீன் கூட போகக்காணோம்.

மீன்கள் நீரோட்டத்தை எதிர்த்தே செல்லும் என்ற உண்மையை அப்பொழுது தான் அறிந்தேன். பெரிய வியப்பாய் இருந்தது. இரண்டு மூன்று நாட்கள் வரையில் மீன் குஞ்சுகள் நீரோட்டத்தை எதிர்த்துக் கண்ணுக்குமுன் நீந்திக்கொண்டே இருந்தன.

ஒருநாள் மாலை பந்தாடப் போகலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் எழுந்திருக்கத் தோன்றவில்லை. எங்கோ மனதில் மூலையில் மீன் குஞ்சுகள் நீந்திக்கொண்டிருந்தன. மோஹினியின் ஆட்டம் தொடங்கிற்று. பேனாவை எடுத்தேன்.

இருப்பதே இன்பமென்றும்
சேறதே சொர்க்கம் என்றும்
வாழ்விலே கடமை ஒன்றைக்
கடவுளே விதித்தார் என்றும்,
போதனை செய்து வந்தாய்
புதுமையைக் கொன்று வந்தாய்
பாசியின் நடுவே போந்து
ரவிமதி முகங்கள் கண்டு,
நீரில் ஓர் முத்தமிட்டு
வெட்கியே பின்னும் மறைதல்
மீன் நாட்டு வாழ்வு என்றாய்.

என்று தாய்க்குக் குஞ்சு சொல்லுவதாக ஆரம்பித்தேன். அதுவே 'தாயும் குஞ்சும்' என்ற கவிதை.

குளத்தில் வாழ்வதினால் ஏற்படும் சலிப்பைத் தவிர்க்க இன்பத்தைத் தேடிச் சென்ற மீன் குஞ்சின் அனுபவத்தையும் குளத்திலேயே வாழ்நாளைப் போக்கிய தாயின் அனுபவத்தையும் அதில் கற்பனை செய்து சித்தரித்திருக்கிறேன். கற்பனையின் தொனி மனித வாழ்வுக்கும் பொருந்துமாறு அமைந்திருக்கிறது. எனக்குப் பிடித்த கவிதைகளில் இது ஒன்று.

இதைப் போலவே என்னுடைய மற்றய கவிதைகளையும் புது முறையில் எழுதியிருக்கிறேன். அசை, சீர், தளை முதலிய வரம்புகளுக்கு இவை உட்பட்டதல்ல. கவிதா உணர்ச்சியே இவற்றின் வரம்பு. இம்முறையின் புதுமையினால் பலர் திகைப்படைந்திருக்கிறார்கள். ஆனால் உண்மையிற் கவிதையைப் புரிந்துகொள்ள விரும்பினால் தோல்விதான் ஏற்படும். கவிதையை உணரத்தான் முடியும். இன்பத்தேன் வந்து பாயுது— காதினிலே என்றால் அறிவுக்குப் புரியாது. வண்டுக்கு மல்லிகைப்பூ வெண்சங்காகும் என்றால் அறிவுக்குப் புரியாது. மனதிற்குப் புரியும். உணர்வுக்குப் புரியும். அறிவு தோல்வியடையும் இடத்தில் கவிதை பிறக்கிறது.

இதை எல்லாம் குறிப்பிடுகிறேன். என் என்றால் என் நண்பர் ஒருவர் 'கவிதையோ எழுதுகின்றாய், எனக்கேதும் விளங்கவில்லை' என்று தன் மனத்தைத் திறந்து காட்டினார். மற்றொரு நண்பர் 'மழை அரிசி' என்னும் என்னுடைய காவியத்தில் வரும் ஊதுவத்திப்பில் எங்கிருக்கு என்ற சந்தேகத்தைக் கிளப்பினார். இரண்டும் நல்ல கேள்விகள். ஆனால் உடனே பதில்சொல்ல எனக்குத் தெரியவில்லை. மறுநாள் 'பிறப்பிடம்' என்ற கவிதையை எழுதினேன். கவிதைக்கும் சிருஷ்டிக்கும் ஒரே பொருள் என்பதுதான் பதில். எனது கவிதா நண்பர்க்கு மிகுந்த இன்பமளித்த கவிதைகளில் இது ஒன்று.

மழை அரசி காவியத்தின்
மாட்சியில் மூழ்கிவிட்டேன்
ஊதுவத்திப்பில் என்றாயே
தேடினேன் எங்கிருக்கு?
கேட்டதும் நல்லதாச்சு
பூதக்கண்ணாடி நண்பா
கையிலே கோலெடுத்தேன்
காலிலே செருப்பை இட்டேன்
ஊதுவத்திப் பில்லைத்தேடி,
உனக்குமுன் நானெழுந்தேன்.

பொதுவாகக் கவிதையைப் பற்றியே பேசும்பொழுது, அகத்திலிருந்து தானாகத் தோன்றும் கவிதைக் கிளர்ச்சிக்கும் புறத் தூண்டுதலின் விளைவாகத் தோன்றும் கவிதைக் கிளர்ச்சிக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏனென்றால் காணும் காட்சி எல்லாம் கவிதையாவதில்லை. முளைக்கும் கருத்தெல்லாம் கவிதை ஆவதில்லை. பிறக்கும் உணர்வெல்லாம் பா ஆவதில்லை. நட்டபயிர் யாவுமா கதிரேறுகிறது? ஆனால் ஒன்று நிச்சயம். எவ்விதமான தூண்டுதலான போதிலும் கவிமனமென்னும் குவையில் உருகி ஓடும் நிலையை அடையாதவரையில் எவ்வித பயனும் இல்லை. குவையில் வைத்து ஊதப்படும் பொருள் வெள்ளியானாலும் தங்கமானாலும் அவற்றை உருக்குவது நெருப் பல்லவா? கவிவெறி அந்தமாதிரியான நெருப்பு. சின்ன நெருப்பு பெரிய நெருப்பென்றுண்டா?

—வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: விய, ஆனி கூ


## சுதந்திரப் பாதையில் இந்தியா

சென்ற மூன்று மாத காலமாகப் பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூதர்கள், இந்திய மக்களுக்குச் சுதந்திரம் வழங்கும் விஷயமாகச் செய்து வந்த அரிய முயற்சிகள் ஒருபடியாக வெற்றியாக முடிந்தன. வகுப்பொற்றுமை கிடையாது போனமையால் இவர்கள் வகுத்த திட்டங்கள் யாவும் சித்தியெய்துவது கஷ்டமாகத் தோன்றின. முஸ்லீம்களின் தலைவராகும் ஜனுப் ஜின்னுவின் அடாத கோரிக்கையைத் திருப்தி செய்வது ஆரம்பத்திலிருந்து பிராண வேதனையாகவே இருந்தது. ஒருபடியாகக் காங்கிரஸ் கட்சியினர்க்கும் முஸ்லீம் சங்கத்தினர்க்கும் இணங்கக்கூடிய ஒரு ஒழுங்கினை இவர்கள் செய்து முடித்தது புகழப்பட வேண்டிய விஷயமாகும். இத்துடன் எல்லாக் கஷ்டங்களும் நீங்கிவிட்டன வென்றுங் கூறவியலாதிருக்கிறது.

இப்போது இடைக்கால அரசியலை நடாத்தப் பதினுன்கு பேர் கொண்ட ஓர் மந்திரி சபையினர் இராசப்பிரதிநிதியால் தெரியப்பட்டிருக்கின்றனர். இதில் ஐந்து முஸ்லீம்களும் ஆறு காங்கிரஸ் கட்சியினரும் ஒரு சீக்கியரும், ஒரு பாஸியும் ஒரு கிறீஸ்தவரும் அங்கத்தவராவர். காங்கிரஸ் சபையுடன் தமக்குச் சமத்துவம் அளிக்கப்படவில்லையென ஜனுப் ஜின்னு சிறிது ஆத்திரங் கொள்கின்றனர். நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் சனத்தொகை கொண்ட முஸ்லீம்களுக்குச் சமத்துவமான பிரதிநிதித்துவம் வழங்குவது எப்படி முறையாகும்? இவ்விஷயமாக இவர் அதிருப்திப்படுவதும் முறையாகத் தோற்றவில்லை. மேலும் ஒரு தேசிய முஸ்லீமையாவது இந்த மந்திரி சபையில் இராசப்பிரதிநிதி நியமிக்கவில்லை. அத்துடன் காங்கிரஸ் சபையினராற் குறிக்கப்பட்ட ஸ்ரீமான் சரத் சந்திரபோஸ் அவர்களும் மந்திரி சபையில் இடம் பெறவில்லை. இவை காரணமாகக் காங்கிரஸ் சபையினரும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

எப்படியாயினும் இக்குறைகள் ஓரளவுக்காவது நீக்கப்படுமென்பது நமபிக்கை. அப்படியாக இரு பெருங் கட்சியினரும் இடைக்கால மந்திரி சபை அமைப்பினை ஏற்றது பெரிதும் போற்றபபட வேண்டியது. தாம் விரும்பியபடி எல்லாவற்றையும் பெறுவதென்பது எப்படி? மிகவும் முரண்பட்டு வேற்றுமை கொண்டு நிற்கும் இரு கட்சியினரைத் திருப்திப் படுத்துவதென்பதும் சாமானிய விஷயமன்று. இந்த அரிய இணக்கத்தைக் கொண்டுவந்த பிரிட்டிஷ் மந்திரிசபைக் குழுவினர்க்கு யாவரும் மனமார்ந்த துதி கூற வேண்டும். பாக்கிஸ்தானல்லாது வேறென்றையும் தாம் அங்கீகரிக்க வியலாதெனத் திடமாகக் கூறித் திமிறிக் கொண்டு நின்ற ஜனுப் ஜின்னுவை வசப்படுத்துதல் இயலாதெனப் பலரும் அபிப்பிராயங் கூறினர். இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் கீழ் எல்லா மாகாணங்களும் தொழிற்படுவதற் கேற்ற ஒழுங்கினை இவ்வகுப்புவாதி ஏற்கும்படி செய்த பெருமை மந்திரி குழுவினர்க்கே யுரியதாகும்.

இனி இந்திய சுதந்திர அரசியற்றிட்டத்தை வகுக்கும் சபையொன்று பல்வேறு மாகாணங்களிலுள்ள சட்ட சபையினரால் தெரிவு செய்யப்படும். அச்சபை செய்து முடிக்கவிருக்கும் வேலையே மிகவும் பிரதானமானது. எல்லாக் கட்சியினரும் வகுப்பினரும் சேர்ந்துழைப்பின், இவ்வேலை விரைநது செய்து முடித்தற்கரியதன்று. ஆனுல் வேண்டுமென்று தடை தாம தங்களைச் சிருட்டிப்பின், நன்மைகள் கிட்டுவதெப்படி? இந்தியாவில் இனிஒருக்காலும் பாக்கிஸ்தான் நிலைபெற இடமில்லையென்று மந்திரி குழுவினர் கூறிவிட, அப்படியன்று பாக்கிஸ்தானத்தைப் பெறுவதே தமது நோக்கமென்றும், இப்புதிய திட்டத்தைத் துணைக்கொண்டு அதை நிச்சயமாகப் பெறவிருப்பதாகவும் ஜனுப் ஜின்னு வாதிக்கின்ருர். இந் நோக்கத்தைக் கைவிடாதிருக்கும்வரையும் கஷ்டங்கள் தோன்ருதிருபபதெப்படி? இயலாததொன்றை—கைகூடச் சிறிதும் வசதிகள் இல்லாத வொன்றை—அவாவி, அதைப்பெறலாமென முனைந்து நிற்றல் எவ்வளவு அறியாமையாகும்?

ஆனுற் புதிய சுதந்திர அரசியற்றிட்டம்தொழிற்பட ஆரம்பித்தபின், இப்போது முரண்பாடடையும் இருகட்சியினரும் சமரசமடைவாரென்பதே அரசியல் வாதிகளின் அபிப்பிராயமாகின்றது. எட்டத்தினின்று விரோதம் பாராட்டிப் போட்டியிடுவதாற்ருன் வித்தியாசங்கள் தோன்றுகின்றன வென்பதும் ஓரளவுக்கு உண்மையே.

அரசியற் பாரத்தை ஏற்று நடத்துங்கால், நிச்சயமாக இவர்கட்கிடையில் ஒருவித இணக்கம் வராதுபோகாது. இந்தியா இருகூருகப் பிரிக்கப்படுவதால் வரும், பெருநட்டங்களும் முஸ்லீம் சங்கத்தினர்க்குச் சிறிது சிறிதாகப் புலப்படும். ஒற்றுமையடைந்த இந்தியாவே உலகிற் பெரிய ஆதிக்கத்தையும் மதிப்பினையும் பெறுமென்பதை முஸ்லீம் சங்கத்தைச் சேர்ந்தோர் நன்குணரக்கூடியதாய்வரும். அவசியமின்றி இந்துக்கள் மீது அவநம்பிக்கை கொண்டமையாற்ருன் இந்தக் கஷ்டங்கள் வந்தெய்தின. என்ருலும் ஜனுப் ஜின்னு தாம இதுவரையும் கைக்கொண்ட வழியைச் சடுதியில் கைவிட ஒருப்படார். முஸ்லீம் பொதுமக்கள் சித்தங் கொள்ளின் இவர் செய்யக் கூடியது யாது? இப்போது பாக்கிஸ்தான் வழங்கப்படாதிருக்கவும் புதிய திட்டத்தை ஏற்றுக்கொண்டமை மெச்சத்தக்கது. ஆகவே இந்தியா சுதந்திரத்தை யடைந்து என்றும் ஒற்றுமையாக வாழுமென்பதே எமது அபிப்பிராயம்.

## தாயின் காலடியிற் சேய்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தெனவும் வீரம் பேசுகின்றது. பிரிட்டன் இலங்கையை உதைபந்தாக்கி இருப்பதை இந்தச் சிலோன் ஒப்சேர்வர் இன்னும் உணரவில்லை. இக்குள்ள அரசியல் தலைவர்களே சொந்த நாட்டை அட்டதிக்குகளிலும் உதைத்துத் தள்ளுகின்றனர். ஸ்ரீ சேனநாயகாதான் இப்பந்தாட்டத்துக்குக் 'கப்டன்.'

டொக்டர் காரே போன்ற தலைவர்கள் தந்தி மூலங் கிடைக்கும் அரைகுறைச் செய்திகளைப் படித்துவிட்டு இக்குள்ள இந்தியர்கள் செய்யும் திருகுதாளங்களை ஆதரித்துப் பேசுவது அழகல்ல. சென்னைத் தொழில் மந்திரி ஸ்ரீ கிரி கூறுவது போல இரு அரசாங்கங்களும் (இந்தியா இலங்கை) ஒரு மகாநாடு ஏற்படுத்தி இந்தியப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதே முறை. ஸ்ரீ சேனநாயகா இவ்விவகாரத்தில் விவேகத்துடன் நடந்து இலங்கையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும்.

# பாதை ஓரத்தில்

★

பாட்டைசாரி

ஸோல்பெரி கோஷ்டியிடம் தலையடிபெற்று அரசியல் அரங்கத்திலிருந்து மறைந்த அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் மீண்டும் உயிர் பெறுவதற்கான வேலைகளைச் செய்கின்றது. கடந்தவாரம் அதன் தலைவரும் வேறு சில காங்கிரஸ் தூண்களும் யாழ்ப்பாணப் பகுதிகளிற் கூட்டங்கள் வைக்க முயன்றனர். ஒன்றும் பலிக்கவில்லை. யாழ்ப்பாணம் நகரமண்டபத்திற் கூட்டம்கூட ஒழுங்குகள் செய்த விடத்தும் ஒரு குருவியும் அந்தப் பக்கம் திரும்பவில்லையாம். இது காரணமாகத் தலைவர் அவசர அவசரமாக அன்று சாயந்தரம் கொழும்புக் கோச்சுக்கு 'டிக்கற்' எடுத்தார் என்று ஊரெங்கும் ஒரே கதை. தெல்லிப்பளை, மல்லாகம் சுன்னுகம் போன்ற இடங்களிலுங் கூட்டங்கள் ஏற்படுத்த பிரயத்தனங்கள் செய்தும் ஒன்றும் வாய்க்கவில்லை. உலகத்தை சதா ஏமாற்றுவதில் ஒருவரும் இன்னும் வெற்றிபெறவில்லை.

### 'ஐரிஷ்தனம்'

"நான் ஐரிஷ்காரனுக இருக்காதுபோனுல் இலஙகையின் பிரஜையாகுவதற்கு விரும்பியிருப்பேன்" என்று பேர்னுட் ஷோ ஆங்கிலப் பத்திரிகையொன்றில் எழுதியிருக்கின்ருர். இது லண்டனிலுள்ள இந்தியப் பத்திரிகையாளர் ஸ்ரீ சுப்பிரமணியம் என்பவருக்கு மிகுந்த வியப்பையூட்டிய காரணத்தால், எதற்காக நீங்கள் இலங்கையை விரும்புகின்றீர்கள் என்று பேறிஞர் ஷோவைக் கேட்டார், அதற்கு ஷோ கூறியதைக் கேளுஙகள்.

"இலங்கையும் அதன் மக்களும் எனக்குப் பிடித்தவர்களாகவிருந்தனர். இக்கருத்து முதன் முதலில் எனது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துபோயிற்று. செயற்கைக் குவியல்களைச் சதா பார்த்துக்கொண்டிருக்கும் மேற்றிசை மக்களின் கண்களுக்கு இலங்கையிலுள்ள இயற்கை அன்னையின் அற்புத சிருஷ்டிகள் பரவசமூட்டின."

பேர்னுட்ஷோ இப்படிக் கூறுவதை அறிந்துதான் போலும் இங்குள்ள இந்தியர்களும் இலங்கையைவிட்டு போவதற்கு மறுக்கின்றனர் என்று கருதவேண்டியிருக்கின்றது!

### வகுப்புவாதச் சர்ச்சை

அந்த இந்தியப் பத்திரிகையாளர் இலேசுப்பட்ட பேர்வழியல்ல. தாடியைத் தடவிக்கொண்டிருந்த ஷோவை அவர் பார்த்து "இலங்கையிற் சிங்களருக்குந் தமிழர்களுக்குமிடையே வகுப்புவாதம் மூளைகொண்டிருக்கின்றது. இப்பூசலுக்கு ஏதாகிலும் பரிகாரங்கூற முடியுமா?" என்று கேட்டார். ஷோ ஒரு கணம் யோசித்தார். அப்புறம் பேச ஆரம்பித்தார். "இது முடியாத காரியம்; ஸ்கொட்லாந்து வாசிகளையும் ஆங்கிலேயர்களையும் போலவும்—பவேரியநாட்டு மக்களும் ருஷியர்களும் போலவும்—கத்தோலிக்கரையுங் கிறிஸ்தவர்களையும் போலவும் ஒருமித்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆனல் இது பரிகசிக்கத்தக்க முறையில் அசாத்தியமானது."

சும்மாவிருந்த ஸ்ரீ சுப்பிரமணியம் பேர்னுட்ஷோவிடம் கேள்விகள் கேட்கப்போய் இப்போது சகல பத்திரிகைகளிலும் அவர் ஷோவுடன் இழுபடுகின்ருர் சந்தன மரத்தைச் சார்ந்த மரமும் மணம் வீசுமல்லவா?

### பாப்பாண்டவர் ஷோ?

கத்தோலிக்கரையும் கிறிஸ்தவர்களையும் ஷோ இணைத்துப் பேசும்போது ஒருமுறை அவரை நண்பர்ஒருவர் கேட்டகேள்வியும்ஷோவின் ரஸமான பதிலும் நினைவுக்கு வருகின்றன. "தாங்கள் கத்தோலிக்கனு?" என்று நணபர் கேட்டார். "என்ன! நீ சுத்த அசடாகவிருக்கின்றீரே? கத்தோலிக்க திருச்சபை எப்படிக்காணும் இரு பாப்பாண்டவர்களை வைத்திருக்க முடியும்!" என்று மின்னல்போல விடைகொடுத்தார் பேரறிஞர் ஷோ.

### அர்த்தமற்ற பேச்சு

இந்தியாவில் நிற்கும் பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்குச் சுதந்திரங் கொடாமற் சீமை திரும்பும் யோசனை இல்லையெனக் கூறுகின்றனர்.

ஒரு கூற்றின் நியாயா நியாயம் சொல்பவனின் பேய்த்தனத்திலும் கேட்பவனின் கெட்டித்தனத்திலும் தங்கியிருக்கின்றது!

இவர்கள் எதற்காக இவ்வளவு காலமும் நின்று காங்கிரஸின் அருமையான நேரத்தை வீணுக்குகின்றனரோ தெரியவில்லை. சுதந்திரம் அளிக்காமற் போவதில்லையென்ருல் இந்தியாவில் இவர்கள் ஏன் நிற்கின்றனர். கொண்டுவந்த முட்டைக் கோவா மூடையை இறக்கிவைத்துவிட்டு போகலாமல்லவா? அடிமை இந்தியாவிற் கால் வைத்த பிரிட்டிஷ் மந்திரிகள் ஊருக்குப் புறப்படும்போது சுதந்திர இந்தியாவிடம் விடைபெற்றுக்கொண்டு செல்வார்களானுல், அவ்வளவு விரைவாக மூன்ருவது உலக யுத்தம் ஆரம்பமாகாதென உறுதி கூறலாம்.

### நடிகர் பேசுகிருர்

தென் இந்திய நடிகர் ஒருவரின் விருப்பு வெறுப்புகளைச் சினிமாப் பத்திரிகை ஒன்று பிரசுரம் செய்திருக்கின்றது. அவர் விரும்புவது: ஆடம்பர உடை, கூட்டங்கள். ரசிப்பது: திறமையுள்ள கதாசிரியர்களையும் நடிகர்களையும் விரும்பிப் படிப்பது: 'ராமகிருஷ்ண விஜயம்' (தமிழ் மாசிகை) வெறுப்பது: கீழ்த்தா ரசனை. அவரைப் பரவசமாக்குவது: இலங்கை........, ரசிகர்களின் கடிதங்கள். இவர் யாரென அறிய விரும்புவோர் எனக்குத்தான் தெரிவித்தால் அடுத்த வாரம் வெளியிடுவேன்!

# மலாய அன்பர் அனுபவம்

## 'ஈழகேசரி'யின் தொண்டு

"கொழும்புத் துறைமுகத்தில் எங்களுக்குக் கிடைத்த குதூகலமான வரவேற்பை என்னுல் ஒருபோதும் மறக்கமுடியாது. அன்பும் தயவும் ஆனந்தமும் அதில் பொங்கி வழிந்துகொண்டிருந்தன. சகல வசதிகளும் எங்களுக்கு அளிக்கப்பட்டன." என்று மலாயாவிலிருந்து கடந்த வாரம் ஊர் திரும்பிய வண. J. W. A. கதிர்காமர் அவர்கள் உணர்ச்சியுடன் கூறினுர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை (16-6-46) மலாயாவிலிருந்து ஏறக்குறைய 450 இலங்கை மக்கள் 'சமாரியா' என்ற கப்பல் மூலம் தாய்நாடு திரும்பினர். இரண்டு மாதங்களுக்கு முன்னர் 1193 மலாயா அன்பர்கள் 'அருண்டேல் காஸில்' என்ற கப்பலிற் கொழும்பு வந்து சேர்ந்தது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

வண. கதிர்காமர் பத்து வருடகாலமாக மலாயாவில் சிறம்பான் என்னுமிடத்தில் தங்கியிருந்தவர். இப்போது விடுதலைகாட்களைக் கழிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருக்கின்ருர். மலாயா சம்பந்தமாக அவர் தெரிவிக்கும் சில கருத்துக்கள் ருசிகரமாகவிருக்கின்றன.

"மலாயா நிவாரண நிதி ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கை அன்பர்கள் இது சம்பந்தமாக உணர்ச்சியுடன் முயற்சித்தார்கள். ஆனல் மலாயாவில் இது விஷயம் தகுந்த முறையிற் கையாளப்படவில்லை. அங்குவந்த இலங்கை அரசாங்கத்தின் உதவிப்பிரதிநிதி செய்யவேண்டிய உதவிகளைச் சரியாகச் செய்யவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை அங்கு அனுப்பியது எங்களது துர் அதிஷ்டமாகும். கடந்த வருடம் செப்டம்பர் மாதம்தொடக்கம் 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை உண்மையாகவே மலாயாவில் வதியும் இலங்கை மக்கள் தவியாகத் தவித்தார். அந்தக் காலத்தில் எங்களுக்கு உதவி அதிகம் வேண்டியிருந்தது. உயர்ந்த நோக்கத்துடன் இலங்கை மக்கள் அனுப்பிவைத்த நிதி நல்ல வழியில் உபயோகிக்கப்படவில்லை. எவ்வித ஒழுங்குகளும் அங்கு ஏற்படுத்தப்படவில்லை. மலாயா மக்கள் ஒருபோதுமே பிச்சை ஏற்று உண்ணும் வாழ்க்கை பெற்றதில்லை. ஆனல் யுத்தத்தின் விளைவாக நாங்கள் பிச்சை பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது! எங்களுக்கெல்லாம் உதவி வேண்டியிருந்தது. கிடைத்த நன்மையை நாங்கள் அனுபவிக்க முடியவில்லை. இலங்கை அரசாங்கத்தின் பதிற்பிரதிநிதி அங்கு இன்றுந்தான் எதற்காக நிற்கின்ருர்? இது எனக்கு நூதனமாகவேயிருக்கின்ற"தென வண. கதிர்காமர் அழுத்தி அழுத்திக் கூறினுர்.

"சரி சிங்கப்பூர் சீவியம் இப்போது எப்படி?" என்று கேட்டேன்.

"ஆஹா! பேசவும் வேண்டுமா? வெள்ளைக்காரர்கள் மலாயாவின் செல்வத்தை யெல்லாம் பெறுவதற்காக அவசர அவசரமாக காட்டை நன் நிலைக்குக் கொண்டு வருகின்றனர். வரண்டு கிடந்த பூமிகள் எல்லாம் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கின்றன. இலங்கையைப் போல உணவுப் பஞ்சம் என்ற பேச்சே இப்போது இல்லை. புடவைத் தட்டுப்பாடு கிடையாது. வேலையில்லாத் திண்டாட்டம் அருகி வருகின்றது. சகல மக்களும் குஷியாக வாழுகின்றனர். இலங்கையிலுள்ளவர்கள் அங்கு உத்தியோகம் பெற விரும்பினுல் தாராளமாகக் கிடைக்கும். எவ்வித கட்டுப்பாடுமில்லை." என்று கூறி ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவித்தார்.

"யப்பானியரின் ஆட்சி அங்குள்ள இலங்கை மக்களின் உடல் நலத்தை நன்ருகப் பாதிக்கவும் பாதித்தது. யுத்தகாலக் கஷ்டங்களும் இன்னல்களும் அவர்களின் வலிவைத் தளரச் செய்துவிட்டன. அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கின்றனர். இளைப்பாறிக் கொண்டு அரசாங்கம் உதவும் பணத்துடன் இலங்கை திரும்புவதே அவர்களின் அவா: இலங்கையின் அரசியல் முற்போக்குக்குத் தங்கள் பங்கை உதவுவதே அவர்களின் நோக்கம். யாழ்ப்பாணத்தில் மீண்டும் வாழ்க்கையை நடத்த எண்ணமில்லை. கண்டிப் பகுதியில் அல்லது தென் இலங்கையில் அரசாங்கம் நிலம் உதவுமாகில் அங்குள்ள மக்களுடன் சேர்ந்து வாழப் பெரிதும் விரும்புகின்றனர். ஸ்ரீ சேனநாயகா சிங்கப்பூருக்கு வந்த காலத்தில் இலங்கைமக்கள் அனைவரையும் பிறந்த நாட்டுக்கு வரும்படியும் அங்குவந்து இலங்கையின் ஜனத்தொகையைப் பெருக்கும்படியும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**இந்தியா**

# கசப்பான தீர்ப்பு

## இடைக்கால அரசாங்கச் சிக்கல்

**"இந்தியாவின் விடுதலைக்காகப் பல்லாண்டுகளாகப் போராடி வரும் காங்கிரஸ் இப்போது மூவர் திட்டத்தை நிராகரித்தால் அரசியல் நிர்ணய சபை விரைவில் ஏற்படாமல் முட்டுக்கட்டை போடுவதாகும்"**

—அ. பி. அரசியல் நிருபர்

இராஜப்பிரதிநிதியின் திட்டத்தை ஏற்று, இடைக்கால அரசாங்கத்தை அமைக்கக் காங்கிரஸ் முடிவுசெய்துவிட்டதென நம்பப்படுகின்றது. காங்கிரஸும் லீக்கும் இதை ஒப்புக்கொண்டால் இடைக்கால அரசாங்கம் இம்மாதம் 26-ந் திகதியிலிருந்து ஆரம்பமாகலாம்.

இராஜப்பிரதிநிதி புதிய நிர்வாக சபைக்குப் பதினன்கு இந்தியத் தலைவர்களைப் பொறுக்கியெடுத்திருக்கின்றார். இவர்களில் ஐந்து ஜாதி இந்துக்களும் ஐந்து முஸ்லீம்களுமிருக்கின்றனர். ஆகவே ஜாதி ஹிந்து—முஸ்லீம் சமபலப் பிரதிநித்துவத்தை இராஜப்பிரதிநிதி அளித்திருக்கின்றார். தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒருவரும் இந்திய கிறீஸ்தவர், பார்ஸி, சீக்கியர் வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும் முறையே ஒவ்வொரு பிரதிநிதியையும் இராஜப்பிரதிநிதி நியமனஞ் செய்திருக்கின்றார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதி காங்கிரஸை சேர்ந்தவராகையால் 14 பேரில் ஆறுபேர் காங்கிரஸ் அங்கத்தினராகின்றனர்.

ஆனல் இடைக்கால அரசாங்க அமைப்பு சம்பந்தமாக தூதுக் கோஷ்டியும் ராஜப்பிரதிநிதியும் அனுஷ்டித்த முறை அதிருப்திகரமானதும் அவமானப்படுத்துவதுமாகும். இத்திட்டம்பற்றிக் காங்கிரஸ் மூன்று ஆட்சேபங்களைத் தெரிவிக்கின்றது:-

1. தேசிய முஸ்லீம் எவரும் இடைக்கால அரசாங்க நிர்வாக சபையில் இடம் பெறவில்லை,

2. ஸ்ரீ சரத் சந்திர போஸ் நீக்கப்பட்டிருக்கின்றார். இது காரணமாக அஸாம் இந்துக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமற் போய்விடுகின்றது.

3. எல்லைப்புற மாகாணத்தில் தேசிய முஸ்லீம்கள் அதிகமாகவிருந்தும் அவர்களைப்புறக்கணித்துவிட்டு முஸ்லீம் லீக்குக்கு ஆதரவு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றினும் மேலாக இந்தியச் சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஸ்ரீ சரத் சந்திர போஸை ஒதுக்கிவிட்டு, காங்கிரஸ் தலைவரையோ அல்லது காந்திஜி அவர்களையோ கலந்து ஆலோசியாது ஒரிஸா பிரதம மந்திரியை இராஜப் பிரதிநிதி அழைத்திருப்பது காங்கிரஸ் தலைவர்களுக்கு ஆச்சரியத்தையும் வெறுப்பையுங் கொடுத்திருப்பது நூதனமல்ல.

அடுத்ததாகக் கடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து மண்கவ்விய சர்தார் அப்துர் நிஷ்டாரை இராஜப்பிரதிநிதி கைதூக்கிவிட்டிருக்கின்றார். இவர் ஐந்து முஸ்லீம்களில் ஒருவர். தவிர சிறுபான்மையினரை நியமனஞ் செய்யும் விஷயத்தில் காங்கிரஸ் சமர்ப்பித்த திட்டத்தின்படி நடந்துகொள்ளவில்லை.

இராஜப்பிரதிநிதியின் தீர்ப்பில் தேசத்தை நிரந்தரமாகப் பிரிக்கும் அம்ச மிருக்கின்றது. கூட்டுத் தொகுதிக்குப் பதிலாகச் சமபலப் பிரதிநிதித்துவ மிருக்கின்றது. பொதுவான தேசிய இலட்சியம் எதும் காண்பதற்கில்லை. இப்புதிய அறிக்கை அதி அற்புதம் வாய்ந்ததென பிரிட்டிஷ் பத்திரிகைகள் பரவசமடைகின்றன. 'பாரததேவி' கூறுவதுபோல "இதைப்போன்ற தாராள மனதை வேறு எங்கே யாவது காணமுடியுமா என்று கூத்தாடுகின்றன. தங்கள் பிரதிநிதிகளின் எந்த முயற்சிக்கும் தாளம் தவறாமல் பக்கமேளம் வாசிப்பது பிரிட்டிஷ் பத்திரிகைகளின் பாரம்பரை வழக்கம். மாண்டேகு — செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்திலிருந்து, சிம்லா மகாநாடு வரையில் எந்த முயற்சியையுமே, அவர்கள் 'யானை குதிரை' என்றுதான் புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். "அடே யப்பா, எவ்வளவு விட்டுக்கொடுத்து விட்டோம்" என்று அவர்களுக்குத் தோன்றலாம். ஆனல் இந்தியர்கள் இத்தகைய 'விட்டுக் கொடுக்கும்' மனப்பான்மையைக் கண்டு திருப்தியடையும் காலம் மலையேறிவிட்டதென்பதை அவர்கள் கவனிக்கவில்லை".

இராஜப்பிரதிநிதியின் அறிக்கையும் அதன் வாசகமும் மற்றுமோர் போராட்டத்துக்கு விதை தூவியிருக்கின்றன. பிரதமர் அட்லியின் 'சுதந்திரம், ஐக்கியம்' என்ற கோஷங்களைப் போட்டுக்கொண்டு தூதுக்கோஷ்டி இந்தியாவை நோக்கியது. அது இந்தியாவுக்கு அளித்த திட்டத்தையும் வேவல் செய்த சதியையும் குப்பை மேட்டில் எறியவேண்டுமென பம்பாய் 'பிரீபிரஸ்' பத்திரிகை கருதுகின்றது. காங்கிரஸ் காலவரையறையற்றுத் தூதுக்கோஷ்டியுடன்விவாதஞ்செய்துசிக்கிக் கொள்ளக் கூடாதெனவும், மக்கள் பக்கம் மறுபடியும் வந்து சேர்ந்துவிடவேண்டுமெனவும்இப் பத்திரிகை வற்புறுத்துகின்றது.

இன்றைய நிலையில் தூதுக் கோஷ்டியும் இராஜப்பிரதிநிதியும் வெளியிட்டுள்ள அறிக்கையை ஏற்பதே தகுமென காங்கிரஸ் கருதலாம். இத்திட்டத்தில் திருப்திகரமான அம்சங்களைப் பார்க்கிலும் மோசமான விஷயங்கள் தான் அதிகம் அமைந்திருக்கின்றன. காங்கிரஸ் இவற்றை நன்கு உணர்ந்திருக்கின்றது. இருந்தும் இந்தியாவின் எதிர்காலத்தை உத்தேசித்துத் திட்டத்தின் குறைபாடுகளை நீக்கும்படி காங்கிரஸ் பிரிட்டனைக் கேட்கும். வேவலின் நிர்வாகசபையில் ஒரிஸாப் பிரதமரின் இடத்துக்கு ஸ்ரீ சரத் சந்திரபோஸ் அவர்களைச் சேர்ப்பதுடன் தேசிய முஸ்லீம் ஒருவருக்கு, வேவல் அழைப்பும் அனுப்புவதற்கு இணங்குவாராகில் நெருக்கடியை ஓரளவுக்குத் தீர்த்துக்கொள்ளமுடியும். அப்படியில்லையென்றால் பிரிட்டன் சுதந்திரம் அளிப்பதாகப் பறை சாற்றிக்கொண்டு இந்தியாவைச் சதா அடிமையாக வைத்துக்கொண்டிருப்பதே அடிப்படையான நோக்கமென்பதை உலகுக்கு நிரூபிக்கும்.

—இ. அ.

# சமஸ்தானாதிபதி சீற்றம்!

## தடையை மீறிய வீர ஜவஹர்

## காயம் ஏற்படவில்லை

காஷ்மீர் சமஸ்தானத்தில் நடைபெறும் அரசியற் குழப்பங் காரணமாகக் காஷ்மீரத்தினுள் ஜவஹர்லால்நேரு பிரவேசிக்கக் கூடாதெனச் சமஸ்தான அதிகாரிகள் ஒரு தடை உத்தரவைப் பிரயோகித்துள்ளார்கள். இவ்வுத்தரவை மீறிப் பண்டிதநேரு காஷ்மீரத்து எல்லையைத் தாண்டிச் சமஸ்தானத்துக்குள் புதன்கிழமை பிற்பகல் பிரவேசித்தார். மறுநாட் காலை 9–30 மணிக்கு டொமெல் என்னுமிடத்தில் சமஸ்தான அதிகாரிகள் இவரைக் கைதுசெய்து முசாபரி பங்களாவிஸ் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள். சமஸ்தான ராணுவப் படை இவ்விடத்திற் காவல் புரிந்துவருகிறது.

நேருஜி தடையுத்தரவை மீறிச் சென்றபோது துப்பாக்கி தாங்கிய படையினர் இவரையும் இவரது சகாக்களையும் தடுத்தனர். இவர்களைக் கையால் தள்ளிக்கொண்டு முன்செல்ல எத்தனிக்கையில் ஜவஹரின் கன்னத்தில் துப்பாக்கிச் சனியனல் சிறிது காயம் ஏற்பட்டது. இவருடன் சென்ற திவான் சமன்லாலுக்கும் இதே மாதிரியான காயம் உண்டானது. ஆனல் ஆசப் அலிக்குக் காயம் ஏற்படவில்லையாம்.

ஜவஹரின் கைது காரணமாக, காங்கிரஸ் காரிய நிர்வாக சபையும், கூட்டத்தை நேருஜி வரும்வரைக்கும் பின்போடத் தீர்மானித்திருக்கிறது.

பின்வந்த செய்தியின்படி: (1) காஷ்மீர் சமஸ்தான அரசாங்கம் நேருவைக் கைதியாக வைத்திருப்பதற்கு விரும்பவில்லையென்றும் (2) தாம் விரும்பியகாலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வதற்கு அவருக்குச் சுதந்திரமுண்டெனவும் (3) நேருஜி, துப்பாக்கிச் சனியனுற் காயப்படுத்தப்பட்டார் என்ற அறிக்கை முற்றாக உண்மையற்றதெனவும் காஷ்மீர் சமஸ்தான அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

# மலாய அன்பர் அனுபவம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டார். இவர்களுக்கெல்லாம் இலங்கை அரசாங்கம் தென் இலங்கையில் அல்லது மலைநாடுகளில் நிலம் உதவுவார்களாகில் இவர்கள் சமூக ஒற்றுமைக்கு உறுதுணை புரிவதுடன் வகுப்புவாதப் பூசல்களையும் பொசுக்குவார்கள் என்பது எனது நம்பிக்கை. குறுகிய நாட்டுப் பற்று இவர்களுக்கு இல்லாதபடியால் இலங்கையின் முற்போக்குக்கு இவர்கள் உழைக்க முடியும்."

அவர் மேலுங் கூறியதாவது: "மலாயாவில் உள்ள இலங்கை மக்களுக்கு இப்போதெல்லாம் அரசாங்கப் பதவிகள் அவ்வளவு கவர்ச்சியை ஊட்டுவதில்லை. வியாபாரஞ் செய்து பொருளீட்டப் பலரும் விரும்புகின்றனர். மலாயாவில் வியாபாரம் நன்றாகப் பெருகப் போதிய வசதிகள் இருக்கின்றன. இதனுல் இலங்கையும் கோடியான நன்மை பெறலாம்."

**"ஜவஹர்லால் நேருவின் மலாயா விஜயம்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்"** என்றேன்.

"ஆமாம், ஜவஹர்லால் நேருவைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற இந்திய மக்கள் உண்மையாகவே மன ஆறுதல் பெற்றனர். நேருஜியின் விஜயம் அவர்களைக் கௌரவப் படுத்தியதுமன்றித் தங்களின் சுகதுக்கங்களைக் கவனிப்பதற்கு ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. நேருஜி புகைரதப்பகுதி ஒன்றின் வேலை நிறுத்தம் ஒன்றைத் தீர்த்து வைத்ததுடன் நிவாரண நிதிகளையும் ஆரம்பித்து வைத்தார்."

அரசியல் விஷயங்களில் வண. கதிர்காமர் அவர்களுக்கு அவ்வளவு ஆர்வம் இப்போது இல்லை. இருந்தபோதிலும் மலாயாவின் புதிய அரசியல் திட்டம்பற்றிக் கேட்டபொழுது 'மலாயன் யூனியன்' இலங்கை மக்கள் விஷயத்தில் எப்படி நடந்துகொள்ளுமென்பது சொல்லமுடியாதெனக் கூறினர். பொன் விளையும் பூமியாக மலாயா இன்று விளங்குவதற்கு இலங்கை மக்கள் நல்ல பங்கு உதவியிருக்கின்றனர். எனவே இவர்கள் மலாயாவைவிட்டு விலகுவது புத்தியல்லவென்பது இவரின் அபிப்பிராயம்.

**"ஐம்பதுக்கைம்பது அரசியற் பின்னம்பற்றி மலாயாவிலுள்ள தமிழ் அன்பர்களின் அபிப்பிராயத்தை நீங்கள் கூற முடியுமா?"** என்றேன்.

"தாராளமாகக் கூறமுடியும். அங்குள்ளவர்களுக்கு சமபலப் பிரதித்துவம் என்ற பேச்சே பிறக்காது. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பறிகொடாது சிங்களருடன் சந்தோஷமாக வாழவேண்டுமென்று விரும்புகின்றேன்: 50: 50 எங்களுக்கெல்லாம் கசப்பானது........"

**"யப்பானியர்கள் இலங்கை மக்கள் விஷயத்தில் எப்படி நடந்துகொண்டார்கள்"** என்றேன் அடுத்ததாக

"பிரிட்டனுக்குச் சார்பாக இலங்கை மக்கள் அநேக உதவிகளைச் செய்தார்கள். யப்பானியருக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. ஆகவே சிலரைத் துன்புறுத்தினார்கள். அப்புறம் யப்பான் ஆட்சி நிலவிய காலத்தில் அவர்களுக்கு இலங்கை மக்களின் உதவி வேண்டியிருந்தது. அரசாங்க நிலையங்களை நிர்வகிப்பதற்கு யப்பானியர் இலங்கை மக்களின் உதவியை நாடினர்.

இவற்றினும் மேலாக இவர் தெரிவித்த ஒரு பரமரகசியம் வெகு சுவாரஸ்யமானது!

இருந்தாற்போல் இருந்து ஒரு நாள் மானிப்பாய், மல்லாகம், உடுவில்முதலான இடங்கள்மீது யப்பானியர் குண்டுகளை வீசினர்என்ற செய்தியைக் கேட்டு மலாய அன்பர்கள் திகிலடைந்தனராம். பின்னர் அத்தனையும் யப்பானின் பொய்ப் பிரசாரம் என்று ஒருவாறு அறிந்துவிட்டனர். B 29 என்ற குண்டுதாங்கி விமானம் யாழ்ப்பாணத்திலே தளம் அமைத்திருந்தது என்ற வீண் வதந்தியும் மலாயாவிற் சிலகாலம் நிலவியதாகத் தெரிவித்தார்.

**"மலாயாவில் ஈழகேசரி கிடைக்கின்றதா?"** என்று அவரைக்கேட்டபோது அவர்கூறிய பதில் உற்சாகமாகவிருந்தது.

"ஈழகேசரிக்கு நான் ஒரு சந்தாதார் என்பதைக் கூற விரும்புகின்றேன். மலாயாவில் ஈழகேசரி அபிமானத்துடனும் அன்புடனும் வாசிக்கப்படுகின்றது. அங்குள்ள தமிழன்பர்களின் இதயகமலங்களில் ஈழகேசரி இடம் பெற்றிருக்கின்றது. இத் தமிழ் இதழின் வளர்ச்சி எனக்கு மகிழ்ச்சியை யூட்டுகின்றது. மலாயாவின் புதிய அமைப்பில் ஈழகேசரி தனது பங்கை உதவியே தீரும் என்பது எனதுதீர்க்கமான நம்பிக்கை. அப்படியே சேவை செய்து வருகின்றதென்பதையும் தெரிவிக்கின்றேன். மலாயாவின் பலபாகங்களிலும் வதியும் தமிழ் அன்பர்கள் ஈழகேசரியைப் பெறுதற்கு இப்போது இருப்பதிலும் பார்க்கக் கூடிய வசதிகள் செய்ய வேண்டும். ஈழகேசரி விரைவில் தினசரியாகுமென்பதை அறிந்து ஆனந்தமுறுகின்றேன். அதன் ஆசிரியர் ஸ்ரீ பொன்னையா அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுகின்றேன்."

—அரியரத்தினம்


இலக்கியப் பிரியர்கள் கனவிலிருந்த

பத்திரிகை

**கலாபவனம்**

"மனிதன் விரும்பும் அழகுணர்ச்சியை வளர்ப்பதே எமது நோக்கம். அவ்வுணர்ச்சியின் மூலமாக உளப்பண்பாடும் சாந்தமும் அமைதியும் புனிதத் தன்மையும் பெறலாம். ஆகையால், அந்தப் பக்குவமான பண்பாட்டுக்கு மார்க்கமாக உயர்ந்த சுவையும், சிந்தனைக்குரிய கருத்தும், தூய்மையான நடையும் செம்மையுமுள்ள இலக்கியமாக **கலாபவனம்** திகழும்.

"உயர்ந்த இலக்கியம், உயர்ந்த கலை என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்து இலக்கியம், இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், சித்திரம், இவற்றின் சரித்திரம், ஆராய்ச்சி, ஆகிய பொருள்களில் கட்டுரைகளும் கவிதைகளும் விமர்சனங்களும் கலாபவனத்தில் இடம்பெறும்."

விரைவில் வெளிவரும்

'கலாபவனம்'

20, 44 வது லேன்,

வெள்ளவத்தை.


## தாயின் காலடியிற் சேய்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் மதமும் இருநாடுகளையும் இணைத்துக்கொண்டிருக்கின்றன. இச்சிறிய தீவை இந்தியா ஒருபோதும் அதட்டிக் காரியம் பார்க்கத் துணியவில்லை.

இருந்தும் இலங்கையிலுள்ள சின்ன மனிதர் தாய்நாடாகிய இந்தியாவுக்குக் கை ஓங்க முற்பட்டுவிட்டனர்.............. சின்னப் புத்தியைக் காட்டும் இலங்கை மக்களுக்கு இந்தியா பதில் கூற முடியுமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது."

### 'உதை பந்து'

இலங்கை ஓரளவுக்கு 'ப்ரீ இந்தியா' வின் கூற்றை நிரூபித்திருக்கின்றது. "இந்தியாவின் காலடியில் இலங்கை கிடக்கின்றது"—என ஸ்ரீ காரே கூறியதை வைத்துக்கொண்டு 'சிலோன் ஓப்சேர்வர்' என்ற ஆங்கிலத் தினசரி ஏதோவெல்லாம் எழுதித் தள்ளியிருக்கின்றது. வளர்ந்துஞ் செல்லப்பிள்ளையல்ல, வாழ்க்கைப் பட்டுங் குழந்தைப்பிள்ளை யல்ல என்ற நீதியில் சிலு சிலுக்கின்றது. சுதந்திரத்தை விரும்பும் லங்கா விரைவிற் சொந்தக் கால்களில் நிற்குமாம். சட்டங்களுக்கேற்ப விளையாட்டுகளிற் பங்கு பெறுமன்றி உதைபந்தாக அதை ஒருவரும் உபயோகிக்க முடியா

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் பெரியவர்கள்!

பெரியவர்களென்றால் ஒரு தினுசு! தங்கள் காரியம் முடியுமட்டும் ஏழை எளியவர்களோடு கொண்டாட்டம்! பின்பு பெரிய மகாராசாக்கள். அவர்களைப் பார்க்கவேண்டுமென்றால் மகா கஷ்டம். வீட்டில் நாய் 'வள் வள்' என்று விரட்டும். நாய் இல்லாவிட்டால் அதற்காகக் கவலைப்பட வேண்டியதில்லை. 'துரை' அப்படித்தான் இருப்பார். ''உன்னை எங்கேயோ பார்த்த ஞாபகம். இப்பொழுது என்ன வேணும். எல்லாம் நான் கவனிக்கிறேன். வேலை நிரம்ப இருக்கிறது.'' என்று நயமாகப் பேசி உள்ளே போவார் அந்தத்துரை. இப்படிச் சொல்லுவதாவது பெரிய அபூர்வமான செயலே! இப்படிப்பட்டவர்கள் என்றாலும் காரியமில்லை. அவரால் சிறிதளவாவது பிரயோசனமுண்டு என்று சொல்லலாம்.

சில மகாபெரியவர்கள் வீட்டுக்குள்ளே அந்தரப்புரத்து மகளிர் போலே இருப்பர். யாராவது கதவைத் தட்டினால் வேலைக்காரனை அனுப்புவார். வந்தவர் எப்படிப்பட்டவர்? காற்சட்டை மேற்சட்டை உடையவரா? வேட்டி சால்வை அணிந்தவரா? பிச்சைக்காரரா? என்பனவற்றை அவன் நன்கு அவதானிப்பான். எத்தனைநாட்கள் முயன்று அவனுக்கு அந்தக் கலையைத் துரை பழக்கினாரோ? ''ஐயா இப்பதான் வெளியே போட்டார். கொஞ்சம் பொறுத்து வந்தால் பார்க்கலாம்'' என்று அவன் சிலருக்குத் துணிந்து சொல்லிவிடுகிறானே சில சந்தர்ப்பங்களில்! துரைக்கு அறியாது இவன் மறுமொழி சொல்லும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகின்றான்!

சமூகத்துக்குத் தொண்டு செய்வார்களாம். ஏழைகளில் இரக்கமாம். கண்ணாலே நீர் ஒழுகும் அவர் பேச்சிலே. மேடையிலே சமாரியாக முழக்குவார்கள். ஐயாவின் இரங்குதலுக்கு இரங்காதவர் எத்தனை பேர்? வீட்டிற் சென்றுபார்த்தால் அங்கே பெரிய போக்குத்தான்.

அவர்கள் எப்படியப்பா பெரியவர்களானார்கள்? நல்லாகத் தின்று கொழுத்துப் பெரியவர்களானார்கள். இல்லை தாய் தகப்பன் செட்டையர். அதனாலே பெரியவரானார். இல்லை இல்லை உத்தியோகத்தில் பெரியவர். ஏழைகளின் பணத்தைக் குட்டிச் சுவராக்கி, ஏனையோரைக் காக்காய்ப் பிடித்து, கைக்குள்ளே கோட்டுகளை வைத்துப் பொத்திப் பெரியவராகிவிடுகிறார்கள். படிப்பிலும் பெரியவரோ? அந்தப் புத்தகம் இந்தப் புத்தகம் —பெயர்கள் தெரியும். நடித்துக்கொள்ளுகின்றார்கள். இவர்களைப் புளுக நாலுபேர். அவர்களை இவர் உயர்த்திப் பேசுவார். ஏன்? தன்னை அவர்கள் ஆகாயத்திலே தூக்கி வைப்பதற்காக!

பெரிய துரைக்குக் கார் உண்டு. நாலைந்துவேலைகாரர் உண்டு. எலெக்றிக் விசிறி உண்டு. சாப்பாடு அவர் பக்கத்துக்கே வந்துவிடும். கையால் எடுத்து வாயிற்போடுவதுதான் அவர் வேலை. அதையும் யாராவது செய்துகொடுத்தால் அது அவருக்குச் சந்தோஷந்தான். சாப்பாட்டுக் கிடையில் 'இடியற்' 'பூல்' என்று பல பதங்கள்—கற்கள்போலே வேலைகாரனுக்கு அபிஷேகமாகும். அவன் ஐந்தையும் அடக்கி மகாயோகி போலே—செயலற்றவனாய் ஆங்கு ஒரு மூலையில் காட்சி தருவான்.

ஐயாவின் குறிப்பை அறிந்து அதற்கு ஏற்றபடி வேலைசெய்வது அப்பப்பா இலகுவான காரியமல்ல!

பெரிய துரைச்சாணி அம்மா இருக்கிறாவே! அவவுக்குக் கீழ்ப் பார்வை இருக்காது. பார்வை எல்லாம் எப்போதும் மேலே! கண் தெரிந்தாலும் கண்ணாடி

**வ. நடராசா**

தான் பெருமையடைவதற்காகவாவது அவர் முகத்தில் ஏறிக்கொள்ளும். 'போய்' என்ற சத்தம். முன்னே ஒரு தேவதை வந்து கைகட்டி நிற்கும். வேண்டியதெல்லாவற்றையும் அது செய்து தொலைக்கும். அந்த அம்மாள் பாரத்தில் பெரியவள்; உருவத்தில் பெரியவள். பார்வையில் பெரியவள்; சாப்பாட்டிற் பெரியவள்.

பெரியவர்களின் பிள்ளைகளைப் பற்றிக் கொஞ்சம் கவனிக்க வேண்டாமா? பாகற்கொட்டை சுரைக்கன்றாக முளைப்பதில்லை அல்லவா? பிள்ளைகள் மற்றவர்களைத் தூசாகவே நினைபார்கள். தமக்குச் சமானமானவர்கள் உலகிலுண்டா என்று எண்ணுவார்கள். தம்மைக் கண்டால் மற்றவர் ஒதுங்கிப் பதுங்கிச் செல்ல வேண்டும். படிப்பு என்றால் சூனியம். மாஸ்டர் இவருக்குப் பணிந்து நடக்கவேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் படிக்க மாட்டார்கள். இவர்கள் படிக்காவிட்டால் மாஸ்டருக்கு சோறு எப்படிக் கிடைக்கும்? இது அந்தத் துரைமக்களின் எண்ணம்!

வீட்டிலே ரேடியோ ஏதோ பாடும். அசல் தமிழ்ப் பாட்டுகளாக இருப்பதில்லை. அங்கியரைப் பின்பற்றும் காலத்தில் இந்தப் பாட்டுக்களையா கேட்பார்கள்? சீ கேவலம்! அந்தப் பாட்டுகள் ரேடியோவிலிருந்து வெளிப்பட துர்நாற்றம் வீசுகின்றது. பாடகர் முகத்தில் பவுடர், சென்ட் பூசாதவர்கள் போலும்! கைக் குட்டையால் மூக்கை அடைக்கிறார்கள். சொண்டைச் சுழிக்கிறார்கள். இஞ்சி தின்ற மந்திபோலே சந்தோஷ பாவம் தோன்றுகிறது அவர்களுக்கு. மேல்நாட்டுச் சரக்குக்காக ஊசி தள்ளி வைக்கப்படுகிறது. ஆகா, எப்படி? பேஷ் இன்னும் எத்தனையோ? இவர்கள் எல்லாம் அந்தச் சங்கீதத்திலே, அந்த டான்ஸிலேதான் பிறந்து வளர்ந்தவர்கள். இவர்கள் தாய் தகப்பன் பாட்டன் பாட்டிகள் கூட அவற்றைக் கேட்டுத்தானே திளைத்தவர்கள். துரைக் குஞ்சுகள் அந்தப் பாட்டை லயித்து மெய் மறந்து துள்ளி ஆடுகிறார்கள். உணர்ச்சி மேலிட்டு வேறு உலகத்துக்குப் போய் விடுகிறார்கள்.

பெரியவர்களின் வாழ்க்கையை நாம் பார்த்துத் தெரியவேண்டியவை பல. அவர்களின் வாழ்க்கை எப்படியிருக்கிறதென்பதை எல்லாரும் கவனிக்க வேண்டும். தம் வாழ்க்கையை பெரியவர்கள் —துரைகள்—பிரபுக்கள் தாமே அறிந்தால் அதனால் மற்றவர்களுக்கு ஏதும் பலன் உண்டாகலாமோ?

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

"MEDIUM"
[Estd. 1929]
261, KANKESANTURAI ROAD
VANNARPONNAI :: JAFFNA
Please correspond with the Manager for the Sale of Properties and anything commercial in North Ceylon.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## "மறுபடியும் மண்டியிடுகின்றார்கள்"

ஐயா,

சென்றவாரத்து ஈழகேசரிப் பிரசுரத்தில் 'சுயா' என்னும் புனைபெயர் பூண்ட எழுத்தாளர் ஷெ தலையங்கத்தின்கீழ் ஓர் கட்டுரை வரைந்து விடுத்திருக்கின்றார்கள். அதில் நகரசபை மண்டபத்தில் நடந்த ஆசிரிய பகிரங்கக்கூட்ட சம்பந்தமாக எழுதியவைகள் உண்மையற்றனவெனவும் வீண் அவதூறுகள் பொதியப்பெற்றனவெனவும் நான் கவனித்து விசனப்பட்டேன். அந்த மாபெரும் மகாநாட்டைக் கூட்ட முயற்சி செய்த இணைச்செயலாளர்களில் நான் ஒருவனானகையால் சில விஷயங்களை மாத்திரம் குறிப்பாகக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக ஆசிரிய சங்கத்தைத் தொழிலாளர் யூனியனாகப் பதிந்துகொள்வதென்றாவது வேலை நிறுத்தஞ் செய்யவேண்டுமென்றாவது அப்பகிரங்கக் கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டுவரப்படவுமில்லை ஆலோசிக்கப்படவுமில்லை. ஆசிரியரல்லாதாரும் சமூகமளித்த அந்தக் கூட்டத்தில் இப்படிப்பட்ட தீர்மானங்களுக்கு இடமில்லையென்பதை அந்த எழுத்தாளர் அறிந்திருக்கவேண்டும்.

இரண்டாவதாக ஆசிரியர் உடனே வேலை நிறுத்தஞ் செய்யாமல் திரும்பவும் திரும்பவும் கூட்டங்களைக் கூடியோ, தூதுக்கோஷ்டிகளையனுப்பியோ, அரசாங்க அங்கத்தவர்களின் கால் கைகளைப்பிடித்தோ காரியம் பார்க்க முயலுகிறார்களென ஏளனமாக எழுதப்பட்டது. பொறுப்புணர்ந்த ஆசிரியரோ, எழுத்தாளரோ, பேச்சாளரோ உடனே வேலை நிறுத்தஞ் செய்யவேண்டுமெனக் கூறமாட்டார்கள். நாம் கையாளக்கூடிய வழிவகைகளெல்லாம் அனுகூலமற்றவையெனக் கண்டபின்தான் வேலை நிறுத்தம் செய்வதைப்பற்றிய தீர்க்கமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். திடீரென ஆசிரியர் வேலை நிறுத்துவாரெனவும், தாம் வேடிக்கையைப் பார்த்துக் கை கொட்டிச் சிரித்து ஆனந்திக்கலாமெனவும் 'சுயா' எண்ணினார் போலும்.

மூன்றாவதாக ஸ்ரீ நடேசபிள்ளை பகிரங்கக் கூட்டத்துக்கு அழைத்துத்தான் வந்தாரோவெனவும் அவர் பேசியவற்றைக் கேட்கச் சிரிப்பு வாராதாவெனவும் குறிப்பிடுகின்றார் அந்த எழுத்தாளர். பகிரங்கக் கூட்டமாகையால் வடமாகாண அரசாங்க சபை அங்கத்தவர்களனைவரும் அழைக்கப்பட்டார்கள். ஸ்ரீ. நடேசபிள்ளை சமூகமளித்தனர். மற்றைய அங்கத்தவர்கள் வராமலிருக்க அவர் மாத்திரம் சமூகமளித்தது அவரின் குற்றமாகாது. இப்பொழுதுதான் முதன் முறையாக ஸ்ரீ நடேசபிள்ளை ஆசிரியர் கூட்டத்துக்கு வாதிருந்தாரெனின் 'பார்ளிமெண்ட்' தெரிவுக்காக நடக்கும் செப்படி வித்தையெனக் கூறலாம்.

இனி ஆசிரிய தூதுக்கோஷ்டியினரில் ஒருவர் தமக்குச் சொன்னதாகச் 'சுயா' ஏதோ உபகதை எழுதுகிறார். ஸ்ரீ மகாதேவாவைச் சந்தித்த தூதுக்கோஷ்டியினரின் தலைவர் ஸ்ரீ A. E. தம்பர். அவரைக் கேட்டால் ஸ்ரீ மகாதேவா ஆசிரியர் வேதன சம்பளத்தில் கரிசனை காட்டினாரா இல்லையாவென்பது நன்று விளங்கும். ஸ்ரீ நடேசபிள்ளையைச் சந்தித்த தூதுக்கோஷ்டியில் நான் ஒருவன். மற்றவர் ஸ்ரீ A. E. தம்பர். நாமிருவரும் சென்ற ஒரு மாதத்தில் பன்முறை ஸ்ரீ நடேசபிள்ளையுடன் ஆசிரியர் வேதன விஷயமாகக் கலந்து பேசியதுண்டு. ஆசிரியருக்குப் பெரிய அநீதி செய்யப்பட்டதென்றும், கல்வி நிர்வாக சபையாரின் சிபார்சுகளைச் சம்பளத்திட்டச் சபையார் ஏற்றுக்கொள்ளாதது பிழையெனவும் அவர் எமக்குப் பலமுறை கூறியிருப்பதற்கு நாம் சாட்சி. சம்பளத்திருத்தம் சம்பந்தமாக இன்ன இன்ன முறையில் முயற்சிக்கவேண்டுமென்று அவர் எம்முடன் கலந்து பேசியதுண்டு. அப்படியிருக்கக் கொழும்பில் ஏதோ சொன்னாரெனத் தமது ஆசிரிய சிநேகிதன் பகற்கனவு கண்டதாகச் 'சுயா' சொல்லுகிறார். அவ்வாசிரிய நண்பன் சிலுசிலுப்பை விரும்புகிற பேர்வழிபோலத் தெரிகிறது. விஷயம் கைகூடினாலென் கூடாவிட்டாலென் தமாஷாய்க் காரியங்களில் கலந்து கொள்ளாவிட்டால் இவர் ஆசிரிய உலகத்துக்கு உதவார், அவர் சட்டம்பிமாருக்கு மண் போடுகிறார் என்றெல்லாம் பேசும் பேராசிரியர் போலத் தெரிகிறது.

இவ்விஷயமாய் எம்மனத்திற் பட்டவைகளை எழுதாமல் விடுதல் எமது மனச்சாட்சிக்கு ஒவ்வாததாயிருக்குமென்றே இதை எழுதப் புகுந்தேன்.

இங்ஙனம்
**T. T. ஜயரத்தினம்,**
வடமாகாண ஆசிரிய சங்கத்துக் காரியதரிசியும்.
அகில இலங்கை ஆங்கில, சிங்கள, தமிழ் ஆசிரிய கூட்டு நிர்வாக சபையின் அங்கத்தவனும்.
தெல்லிப்பழை,
20-6-46.

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO
இரும்பு கம்பிகள் கேடர்கள் சிலாகைகள் அச்சுகள் தகடுகள்
நீர் இறைக்கும் யந்திரங்கள் குழாய்கள் தாங்கிகள்
கல்வனேஸ் தகடுகள் தாங்கிகள் வாளிகள்
கைத்தொழிற்குரிய ஆயுதங்கள் மற்றும் கமத்தொழிற் கருவிகளும்
பித்தளை தகடுகள் பூட்டுகள் பிணைச்சல்கள்
மைவகைகள் மை எண்ணெய் வானிஸ்
சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்
சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்திரிறோட் : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்சிரன்' 'போன்: 62
[2782]

### நொண்டி நாடகம்

ஐயா!

**2-6-46-ல்** வெளிவந்த 'ஈழகேசரி' இதழில் அ. வி. ம. அவர்கள், கரைத் தமிழர் சிலர் கள்ளுண்டு 'களை'யாகிய பின் பாடிய சில பாக்களை வரைந்துளர். இப்பாக்களை இயற்றியவரரெனஅறிய விரும்புகிறேன். நானறிந்த நொண்டி நாடகச் சரிதை வேறு. அதின் பாக்களுக்கு மிவற்றிற்குமிடையே சொற்ப வித்தியாசமே காணப்படுகிறது.

உ-ம்: நொண்டியின் பாடல் "மலர் தங்கு..................

9-ம் வரி—

சாடைக்கு நாரதர் நிகரோ—வலியச்
சண்டைக்குப் பெண்டுகள்
தானென்ன நிகரோ
கோடைக்கு..................

15-ம் வரி—

வழுக்கலால் விழுந்தோடிப்
போனேன்—அப்போ
வழுக்கிவிழுந்திக்கால் சுழுக்கினதப்பா

சரக்கு விற்கிற பாடல்

கொள்வா ருண்டோ—சரக்குகள்
கொள்வா ருண்டோ

1. கொள்பவ ருள்ளதோ
நல்ல சரக்குகள்
உங்களுக் கென்னவே,
கொண்டுவந் தேனிங்கே
உள்ள படிசொல்லிக்
கொள்விலை தன்னிலும்
ஒன்றுரெண்டு நாணும்,
ஒட்டிவைத்துத் தாறேன்—
(கொள்)

2. பிள்ளைச் சரக்குப்
பெருங்காயம் பீனறி
பெற்ற தாய்மாருக்குச்
சுக்கு மிளகுடன்
உள்ளி மிளகாய்
உலுவா கறுவாவும்
உண்டன வேதாறேன்
பெண்டுகளே யாரும்
(கொள்)

பொன்னுக்கோன் அரசனல்ல-மாடாடு மேய்க்கும் பொடியன்—நீதியை விளங்கி அறிந்தபின் மன்னர்க்குக் கடிதம் வரைகிறான்:—

நிதிமுடி சூடும் நிருபதி தனக்கு
மதிமுடி சூடும் மன்னவ னென
இடக்குல மதலை யென்றபொன்
னுக்கோன்
திடத்துட னெழுதுந் திருமுக மாவது
..............................

சூ. ம. சூசைப்பிள்ளை
கொட்டாஞ்சேனை 13-6-46.

### ஐயவினு விடை:

அப்பர் தேவார இலிங்க புராணத் திருக்குறுந்தொகைப் பாடல்களுள், இருவரே என்ற சொல் நான்முகனையும் திருமாலையுங் குறிக்கும். இதனைக் கடைசிப்பாடலில் 'செங்கணனும் பிரமனும்' என அப்பரே குறிக்கிறார். அதனில் 'இருவரே' வாராமையும் காண்க! மற்றும் அப்பாடல்களுள், 'தருக்கினற்சென்று', 'அந்தங்காண', 'கெண்டி', 'பட்டகட்டமுற்றாரங்கிருவரே' (தேடித்தன்புற்றமை) என்ற சொற்களும் மிகத்தெளிவுறுத்துகின்றனவே.

தேவாரத்தே ஐயந்தீர்த்தற்கரிதும், இயலாததுமான சொற்கள் பலவுள. ஈழகேசரியில் எழுந்தமையின் அத்தகையதோ வென எண்ணினேன். ஆனால் மிக எளிய, பார்த்ததும் தெளிதற்குரியது தானே இது!

சிறிது ஆழ்ந்து ஆராய்ந்தால் தமிழறிவுடையோர்க்குப் புலனாகாமற் போகாதே. ஒரு முறை பார்த்ததும் அன்பர் ஐயத்தை உடனே கேட்டுவிட்டார்போலும்! தமிழறிஞரைக் கேட்டுக் கலந்து ஆராயவில்லையோ?

எப்படியும் ஐயங் கிளப்பியவர்க்கு நன்றி.

மு. கோவிந்தசாமி
செல்லிக்குப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மன்னிப்பு

கே. ஆர். நாதன்

ஐந்து வருட காலத்தின் பின் இன்றுதான் என் பிறந்த வீட்டிற்கு வந்தேன். எங்கள் வீட்டில் என் தங்கையும் அவள் கணவனும் தவிர வேறுயாருமில்லை. அப்பாவும் அம்மாவும் இறந்து இப்போது எட்டு வருடங்களாகின்றன. இரவில் பிரயாணஞ்செய்த அலுப்பினுல் சார்வுநாற்காலியிற்சாய்ந்துகொண்டிருந்தேன். குழந்தைகள் முற்றத்தில் கூச்சலிட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். உறக்கம் வரவில்லை. குழந்தைகளின் விளையாட்டைக் கவனித்துக்கொண்டேன். தங்கையின் பிள்ளைகளுடன் வேறுயாரோ ஒரு பெண்குழந்தையும் விளையாடிக்கொண்டிருந்தது. சுமார் மூன்று வயதிருக்கும். மூக்கும் முழியுமாக நல்ல அழகாக இருந்தது. எழுந்து போய் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தேன். மற்றக் குழந்தைகளெல்லாரும் விழித்தார்கள். சாய்வு நாற்காலியிற் படுத்துக்கொண்டு குழந்தையை நெஞ்சில் இருத்திக் கதை கேட்டுக்கொண்டிருந்தேன். குழந்தை ஒன்றும் சொல்லாமல் நான்கு பக்கமும் பார்த்து திரு, திருவென்று விழித்தது. அப்படியே அணைத்து முத்தமிட்டுக்கொண்டு "பெயரென்ன?'' என்று கேட்டேன்,

குழந்தை ஒன்றும் பேசவேயில்லை.

இரவு கொண்டுவந்த விசுக்கோத்து டின்னிலிருந்து இரண்டை எடுத்துக் குழந்தையின்கையில் கொடுத்தேன். ஒரு விசுக்கோத்தைக் கையில் வைத்துக்கொண்டு, மற்றதை வாயிற் கடித்துத் தின்றது. குஷி பிறந்துவிட்டது எம்பேர் சி-ன்-ன-மணி. என்று இழுத்துச் சொல்லிற்று: 'உன் ஐயா பேர்' 'ஐயாத்தான்'. 'அம்மாபேர்' 'அம்மாத்தான்'. மாம்பழவாயைத் திறந்து அது பேசிய சொற்கள் மதுரமாக விருந்தன. குழந்தையை அள்ளி யள்ளி முத்தமிட்டேன். ஆனல் குழந்தையின் தாய் தந்தையைத் தெரியவில்லையே.

"தேநீர் ஆகிவிட்டது சாப்பிடுங்கோ'' என்ற சத்தத்துடன் வந்த கமலா "ஓகோ! சின்னமணியும் சிநேகம்போலிருக்கே!'' என்ருள்.

"ஆமாம், பிள்ளை என்னுடன் சிநேகம்தான். ஆனல் அப்பா அம்மாவைத்தான் தெரியல்லியே?''

'தெரியவில்லையா அடுத்த வீட்டு காமாட்சியின் மகள்தான்'' என்ருள்.

என்மனம் ஒருகணம் பதட்டமடைந்தது.

ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு, மணியின் அப்பாவின் பெயரென்ன என்றேன்.

சேதுராமனும் பேர். தபாற்கந்தோரில் ஏதோ அறுபது ரூபாவில் 'கிளாக்' வேலையாம் என்று சொல்லிக் கொண்டேபோனுள். இதற்கிடையில் என்சகோதரி சரசு கூப்பிடவே எழுந்து சென்றுவிட்டாள்.

"காமாட்சியின் மகள் தான்'' என்ற சொற்கள் என் மனதிலுள்ள பழைய எண்ணங்களைக் கிளறிவிட்டன. பழைய ஞாபகங்களெல்லாம் என் மனக்கண் முன் ஒன்றின்பின் ஒன்ருகத் தோன்றின.

* * *

காமாட்சி என் அடுத்த வீட்டுப் பெண். சிறுவயதா யிருக்கும்போது நாங்கள் இருவரும் எங்களூர் மிஷன் பாடசாலையில் தான் படித்து வந்தோம். வீடு திரும்பியதும் சாப்பிட்டு விட்டு விளையாடுவோம். சோறு கறி ஆக்க வேண்டியது (உண்மையான சோறுகறியல்ல மண்ணில் தான்) காமாட்சியின் கடமை. உண்ண வேண்டியது என் கடமை. இதுதான் விளையாட்டு. உண்ணும்பொழுது கறிக்கு உப்பில்லை, சோறு அவியவில்லை— இப்படிப் பேசுவேன் நான். உப்புவாங்கக் காசில்லை—நெருப்பு மூட்ட விறகில்லை என்பாள் அவள். அவள் என்னைத் தன் விழிகளாற் பார்க்கும்போது அப்படியே விழுங்கி விடவேண்டும் போலிருக்கும் எனக்கு.

கன்னத்தில் கிள்ளிப்போட்டு ஓடுவாள். சாப்பிடுவதை நிறுத்தி விட்டு ஓடவேண்டியது தான். பூப்பிடுங்கிச் சூடுவோம், தண்ணீர் அள்ளிக் கொட்டி விளையாடுவோம். இப்படி இன்னும் எங்கள் அநேக விளையாட்டுகள். இவைதான் மாலைநேரப் போது போக்கு. இரவில் இருவரும் சேர்ந்து படிப்போம், கணக்குகள் செய்வோம், பாட்டுப் பாடுவோம்.

காமாட்சிக்கு வயது 14 ஆகிவிட்டது. என்னைத்தேடுவதில்லை. தாயம் போடவும் வருவதில்லை. அவளுக்கு வெட்கம் அதிகம். அவளுடைய முகத்தில் இப்போது சில மாறுதல்கள். இனிய பார்வை... ... ...

அமுதூறும் இதழ்கள்........ என் தங்கையுடன் பேசுவதற்காக வீட்டுக்கு வருவாள் அவள். என்னையுங் கூப்பிடுவாள் என்றே காத்துக் கொண்டிருந்தேன். ஆனல் அவள் என்னுடன் பேசவேயில்லை, இவ் விஷயத்தில் நான் பின்நிற்கவில்லை. ஒருநாள் சரசுவுடன் விளையாடிவிட்டு தன் வீட்டிற்குப் போவதற்காக நடைகூடத்திற்குள்ளாலே ஓடிவந்தாள். மணி 5 இருக்கும். ஒருவருமில்லாதபடியால் உடனே அவள் கைகளை எட்டிப் பிடித்து "காமு என்மேல் உனக்குக் கோபமோ? என்று கெஞ்சுவதுபோற் கேட்டேன்.''

.........பதில் ஒன்றும் இல்லை

"உனக்கு நான் என்னதீங்கு செய்து விட்டேன்'' என்று கேட்டாள். அந்தக்குரலில் எவ்வளவு மென்மை.

"ஒருகோபமுமில்லை.'' என்று கனிவாகக் கூறினேன்.

"எனக்கும் ஒரு கோபமும் இல்லை'' என்று கூறிவிட்டுக் கையைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

* * *

சில தினங்கள் சென்றன. காமுவைக் காணவில்லை, என்மனம் வெறிச்சென்று வரண்ட பாலைவனம் போலிருந்தது. பாடசாலைக்குப் போவதும் படிப்பதும் வீட்டிற்கு வருவதுமாகவேயிருந்தேன். ஒருநாள் காலை பாடசாலைக்குப் புறப்பட்டாயிற்று. நடைகூடத்தில் உள்ள நிலைக்கண்ணுடியில் தலை சீவிக்கொண்டிருந்தேன். பின் பக்கமாக யாரோ வருவது தெரிந்தது. பாவாடை அணிந்திருந்தாள். "டொலக்'' பளிச்சென்று கொண்டிருந்தன. கண்ணுடியில் பார்க்கும்போது ஏதோ சித்திரப் பாவைபோலவே தோன்றினுள். நான் தலை வாருவதைவிட்டு அச் சித்திரப் பாவையின் அழகில் மயங்கிக் கொண்டிருந்தேன். அருகில்வந்து "உன்னிலும் நான் என்ன அழகா?'' என்ருள். அவள் பார்வையில் நிலைக்கண்ணுடியில் நான் சொக்கியே விட்டேன். திரும்பி அவளை அப்படியே அணைத்து காற்றிற் பறந்த கேசத்தை மற்றக்கையால் ஒதுக்கி தலையைப் பிடித்துக்கொண்டு முத்தமிட்டேன். நேரம் போனதே தெரியவில்லை.

"காமு நீ என்னைக் கல்யாணம் செய்வாய்தானே!'' என்றேன்.

"நான் உன்னையன்றி வேறு யாரைக் கட்டிக் கொள்வது'' என்ருள்.

"சத்தியம்செய்'' என்று என் கையைக் கொடுத்தேன் என் கைமேல் தன் கையை வைத்தாள். அன்றையதினம் பாடசாலைக்குப் போனது பற்றி ஞாபகமேயில்லை.

இரண்டுமாதங்கள் ஓடிச்சென்றன. மேற்படிப்புக்காக வேறு இடம் செல்லவேண்டியிருந்தது. வாசலில் வண்டிவந்து நின்றது சாமான்கள் ஏற்றப் பட்டன. காமாட்சியும் வாசலில் வந்து நின்ருள். நான் வண்டியிலேறியதும் "ஜிங் ஜிங் ஜிங் ஜிங்'' என்று குலுக்கிக் கொண்டு வண்டி கிளம்பிற்று. வண்டி மறையுமட்டும் காமு பார்த்துக் கொண்டேயிருந்தாள். [illegible] அவளை மறையுமட்டும் இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

* * *

தலைவிதி யாரைத் தப்பவிட்டது. படிக்கப்போன இடத்திலே எனக்குக் கல்யாணமும் நிறைவாயிற்று, என் சிற்றப்பாவின் எண்ணப்படி. இப்போது நானும் கமலாவும் நன்ருகத் தான் வாழ்க்கையை நடத்தி வருகின்ரேும்.

"கமலா! நீ எப்ப வந்தாய். நான் இப்பதானே அறிந்தேன்— வந்துவிட்டாயென்று''. இப்படிச் சொல்லிக்கொண்டே வந்தாள் காமாட்சி. கமலா ஒருமுறை ஊருக்குத்தனிய வந்திருந்தாள். அப்போது இருவரும் பழகிக் கொண்டார்களாக்கும். சின்ன மணி என் அருகில் இருந்து விசுக்கோத்துத் தின்றதைக் கண்ட காமாட்சி "மணி வா!'' என்று கூப்பிட்டாள். அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். என்னை மன்னிக்கும்படி என் மனம் மன்ருடியது. அவள் பார்வை — முந்தியபார்வையல்ல— "பழைய ஞாபகங்களையெல்லாம் மறந்து விடுங்கள்'' என்று கெஞ்சுவன போல் இருந்தன.

புழுக்கம் தாங்க முடியாமல் மணியை (சின்னமணி) தாயுடன் சேர்த்துவிட்டு மேசையிலிருந்த அன்றைய தினசரிப் பத்திரிகையை எடுத்து [illegible] வெளியே நடந்து சென்றேன்!

## 250-ம்° இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### அமெரிக்கன் பருத்திப் பீஸ் சாமான்கள் இறக்குமதியாளருக்கு அறிவித்தல்

அரசினர் தொகையாக அமெரிக்கன் புடவைகளை வாங்குந் தற்போதைய முறையை விடுத்து வியாபாரவாயிலாக இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுளது. எங்களுக்கென ஒதுக்கப்பட்ட புடவை வகைகளை இறக்குமதி செய்யப் புடவைக் கட்டுப்பாட்டதிகாரியிடமிருந்து தகுதிப் பத்திரம் உள்ளவர்கட்கு இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரி லைசன்ஸ் வழங்குவார்.

2. 1946-ம் ஆண்டு ஆகஸ்டுமீ° 15-ந் திகதிக்குப் பிந்தாது இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு நாலு பிரதிகள் இன்டென்ற் (Indents) அனுப்பப்படவேண்டும்;

3. இறக்குமதி லைசன்ஸ் பெற்ற 14 நாட்களுக்குள் கிறெடிற் கடிதம் திறக்கப்படவேண்டும். அவ்வகையான கிறடிற் கடிதம் (Letters of Credit) திறக்கப்படாவிட்டால் கொடுக்கப்பட்ட லைசன்ஸ் ரத்துச் செய்யப்படக்கூடும்.

4. அமரிக்கன் C. P. R. B. வகுப்பு ஒவ்வொன்றுக்கு வேறு வேறு இன்டென்ற் அனுப்பப்படவேண்டும்.

5. ஏதாவது வகுப்பில் ஒதுக்கப்பட்டது முடிந்து போனல் மிச்சமாயிருக்கிற இன்டென்ற் விண்ணப்பகாரனுக்கு அனுப்பப்படும். லைசன்ஸ் கொடுபடமாட்டாது.

6. எல்லா விண்ணப்பகாரரும் புடவை லைசன்ஸ் இலக்கத்தையும் எனது தத்துவம் கொண்டிருக்கிருர்களோ என்பதையும் குறிக்கவேண்டும்.

7. மூன்ருவது குவாட்டருக்குரிய பங்கு இன்னும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகையால் இறக்குமதியாளர் இரண்டாவது குவாட்டர் பங்குப்படி இறக்குமதி லைசன்சுக்கு விண்ணப்பஞ் செய்வார்களாக. எல்லா வேண்டுகோளும் வகுப்பு அயிட்ட இலக்கம் C. P. R. B. வகுப்பின்படி குறிக்கப்படவேண்டும்,

8. 1946-இன் இரண்டாவது குவாட்டர் பங்கீடும் வகுப்பு முறைகளின் அட்டவணையும் புடவைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது உதவிப் புடவைக் கட்டுப்பாட்டதிகாரி 104 இரண்டாங் குறுக்குத்தெரு, புறக்கோட்டை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ஈ. ரெுட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 11-6-1946 [2803]

# இதுவும் மந்திர சிகிச்சையா?

மகாத்மா காந்தி

ஒரு நண்பர் வேடிக்கையாகக் கேலி செய்து எழுதுவது:—

"தாங்கள் 17-3-46 ஹரிஜன் பத்திரிகையில் இயற்கைச் சிகிச்சை பற்றி எழுதியிருந்த கட்டுரையை வாசித்தேன். சாதாரணமாக 'நம்பிக்கைச் சிகிச்சை' என்று கூறுகிருர்களே. அதற்கும் இயற்கைச் சிகிச்சைக்கும் ஏதேனும் நெருங்கிய சம்பந்தமுண்டா என்று அறிய விரும்புகிறேன். எந்தச் சிகிச்சையாலும், செய்யப்படும் சிகிச்சை பயன்தரவேண்டுமானல் அதில் நம்பிக்கை இருக்கவேண்டியது அவசியமே. ஆனல் வைசூரி, குன்மம் போன்ற நோய்களுக்கு மருந்துகொடாமல் வெறும் நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொண்ட சிகிச்சை முறைகள் கையாளப்படுவதை அறிவீர்கள். வைசூரியைக் குணப்படுத்துவதற்கு — முக்கியமாகத் தென்னிந்தியாவில் — இறைவனுடைய லீலை என்று எண்ணி எவ்வித சிகிச்சையும் செய்வதில்லை. மாரியம்மனுக்குப் பூஜைபோடுவார்கள். அநேக சமயங்களில் நோய் மாயமாக மறைந்துவிடவும் செய்கிறது. நாட்பட்ட குன்ம நோய்களின் நிவாரணத்தைக் கோரி திருப்பதியிலுள்ள தெய்வத்துக்கு நேர்ந்து கொள்கிருர்கள். நோய் குணமானதும் நேர்த்திக் கடனைச் செலுத்தி விடுகிருர்கள். என்னுடைய தாயாருக்கு அந்த விதமான வலி இருந்தது. திருப்பதிக்குப் போய் வந்த பிறகு அது இல்லாமற் போய்விட்டது.

இந்த விஷயத்தின் ரகசியத்தை அறிய விரும்புகிறேன், இயற்கைச் சிகிச்சை முறையினிடமும் இதே மாதிரியான நம்பிக்கையை வைத்தால் டாக்டர்களுக்குத் திரும்பத் திரும்பக் கொடுக்கும் செலவுகள் குறைந்துபோகுமல்லவா? டாக்டர்கள் நோயாளிகளாகவே வைத்திருப்பதற்காக மருந்து சேர்த்துக் கொடுக்கும் பல்ருடன் சதியாலோசனை செய்வதாக ஆங்கிலப் பழங் கவிஞர் சாஸர் என்பவர் கூறுவது சரிதானே?''

## விடை:

மேற் கூறிய சிகிச்சை முறைகள் இயற்கை முறையுமன்று, அதில் நான் சேர்த்துள்ள ராமநாம சிகிச்சையுமன்று. ஆயினும் அவை, அநேக சந்தர்ப்பங்களில் இயற்கையானது. எவ்வித சிகிச்சையுமின்றி நோயைக் குணப்படுத்துகின்றது என்பதையே காட்டுகின்றன. இந்திய மக்களிடம் எவ்வளவு தூரம் மூட நம்பிக்கை வேரூன்றி யிருக்கிறது என்பதையும் அவை தெளிவாகக் காட்டுகின்றன. இயற்கை வைத்தியத்தின் நடுநாயகமாக விளங்கும் ராமநாமம் மூட நம்பிக்கையின் பகைவனுகும். அதர்மத்துக்கு அஞ்சாதவர் இதர முறைகளைத் தங்கள் நலனுக்காகத் தவருன முறையில் உபயோகித்துக் கொள்வது போலவே ராமநாமத்தையும் உபயோகித்துக் கொள்ளவார்கள். வாயால் மட்டும் ராமநாம பஜனை செய்வதால் எவ்விதமான குணமும் உண்டாகாது. நண்பர் கூறுகிற நம்பிக்கைச் சிகிச்சையெல்லாம் அறிவில்லாமற் செய்யும் குருட்டுச் சிகிச்சையேயாகும். அதனல் அது கடவுளுடைய நாமத்தை இழிவே செய்கின்றது. கடவுள் நாமம் என்பது வெறும் கற்பனையான காரியமன்று. அது உள்ளத்தினின்றே உதிக்க வேண்டும். கடவுளிடமும் அவருடைய தர்ம நீதியிலும் பரிபூரணமான நம்பிக்கை உடைமையே வேறு எவ்வித மான உதவியுமின்றி நோயைப் பரிபூரணமாகக் குணப்படுத்துவதாகும். பரிபூரணமான மனமே பரிபூரணமான ஆரோக்கியம் தரவல்லது என்பதே கடவுள் நீதி. பரிபூரணமான மனம் என்பது' பரிபூரணமான இதயத்தினுலேயே உருவாகும். அத்தகைய இதயம் டாக்டர்கள் குழாய் வைத்துக் காணும் இதயமன்று. இறைவன் கோயில் கொண்டுள்ள இதயமேயாகும். கடவுளை இதயத்திற் காண்பவருடைய மனத்தில் எந்தவிதமான மாசுற்ற எண்ணங்களும் எழமாட்டா. எண்ணம் தூயதாயிருந்தால் நோய் உண்டாகமுடியாது. அந்தவிதமான தூய உள்ளம் படைப்பது கஷ்டமான காரியந்தான். ஆனல் அந்தவிதமான உள்ளம் வேண்டியதின் அவசியத்தை உணர்வதே முற்படியாகும். அதற்கேற்ற காரியஞ் செய்யப் புகுவதே அடுத்தபடியாகும். இந்தவிதமாக வாழ்க்கை முறையின் அடிப்படையில் மாறுதல்செய்தால், செய்துகொள்பவன் அதேகாலத்தில் இதுவரை மனிதன் கண்டுள்ள சகல சுகாதார விதிகளையும் அனுஷ்டித்து வருவான். அந்த விதிகளை அனுஷ்டியாமலே தூய உள்ளம் படைத்துவிட்டதாகக் கூற முடி


(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest Circulation in Ceylon, India & Malay States
Vol. 16 | Chunnakam, Sunday, June 23, 1946 | No. 46

நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனுதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2741]

## கல்வி உலகிற் கலக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும்பெறவில்லை. அவர்களும் கௌரவம் வாய்ந்தவர்கள். சமூகத்துக்குஉயிர்போன்றவர்கள். என்பனவற்றை அரசாங்கம் உணர்ந்திருக்குமாகில் ஆசிரியர்களை இப்படி அடியோடு புறக்கணித்திருக்கமாட்டாது.

ஊருக்கு இளைத்தவன் ஆண்டி என்பதுபோல அரசாங்கத்தின்கண்ணுக்கு ஆசிரியன் துரும்பாகவே தெரிகின்றது. பகிரங்கசேவைப் பகுதி உத்தியோகஸ்தர் அநேகரின் அந்தஸ்து மிகக் குறைவாக இருந்தபோதிலும் அவர்களுக்கு அரசாங்கம் தாராளமாகச் சம்பளம் உதவுவது உண்மை. ஆனாற் பொறுப்பு மிகுந்த ஒரு ஆசிரியன் புறக்கணிக்கப்படுகின்றான். ஆசிரியர்கள் இதைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. சகிக்கவும் இயலாது. பொன்போன்ற இந்த குணத்தைக் கையாண்டு அரசாங்கத்தை அடிபணியச் செய்ய வேண்டும். அரசாங்கசபை அங்கத்தினர் அத்தனை பேருக்கும் சிறந்த பாடமும் படிப்பித்து வைக்கவேண்டும். கல்வி மந்திரி கன்னங்கராவுக்கு இருக்கின்ற தலையிடிகள்போதாதென்று இன்னுமோர்தலையிடி சேர்ந்திருக்கின்றது. கல்வி மந்திரி ஆசிரியர்களின் கோரிக்கையை அசட்டை செய்யாது மந்திரிசபையை ஆசிரியருக்கும் நீதி வழங்கும்படி வற்புறுத்தவேண்டும். தவறின அதனால் விளையும் தீமைகளையும் அனுபவிக்கத் தயாராகிக் கொள்ளவேண்டும்.

### ஒரு சந்தர்ப்பம்

ஆசிரியர்களுக்கு அரசாங்கம் விளைத்துள்ள அநீதி கொம்யூனிஸ்டுகளுக்கு வாய்ப்பாக அமைந்திருப்பதைக்கண்டு அவர்களும் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள முயற்சி செய்கின்றனர். ஆசிரியர் சங்கங்கள் தொழிற்சங்கமாகப் பதிவு செய்ய முற்பட்டிருப்பதைக் கண்ட கொம்யூனிஸ்டுகள் ஆசிரியர்களுக்கெல்லாம் பக்கபலம் உதவுவதற்கு முன்வந்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் இது சம்பந்தமாகப் புத்தி கூறுகின்றனர் எனப் பத்திரிகைகள் மூலம் அறிகின்றேன். கொம்யூனிஸ்டுகளும் வாலை ஆட்டுவதற்கு அரசாங்கம் ஒரு சந்தர்ப்பம் அளிக்குமாகில் இலங்கையின் அரசியல் நிலை படுமோசமாகுவதற்கு உதவி புரிவதாகும். வேலை நிறுத்தம் ஏற்படுத்துவதில் நல்ல அனுபவம் வாய்ந்த கொம்யூனிஸ்டுகள் ஆசிரியர்களின் அனுதாபத்தைப் பெறுவார்களாகில் அப்புறம் மொஸ்கோ சித்தாந்தம் எமக்கெல்லாம் பெரிய இழுபறிகளை விளைக்கக் கூடும்.

ஆகவே, இலங்கை அரசாங்கம் இவற்றையெல்லாம் கவனித்து ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைக்கு இணங்குவதே புத்தி சாதுரியமானது. இல்லாது போனால் சந்தர்ப்ப வாதிகளின் செல்வாக்குப் பெருகுவதற்கு உதவி செய்வதாகும்.

### லிகிதர்கள் வேதனம்

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துப் பிரதிநிதிகளும் தலைமை ஆசிரியர் மகாநாட்டின் பிரதிநிதிகளும் கடந்த சில தினங்களாக இங்குள்ள கல்விப் பகுதித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுகின்றனர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் ஸ்ரீ குமாரசாமி அவர்கள்தான் தலைமை ஆசிரியர் மகாநாட்டின் தலைவர். அவரும் இங்குள்ள சில கல்லூரி அதிபர்களும் கல்விமந்திரி கன்னங்கராவையும் அரசாங்கசபை முதல்வர் சேனநாயகாவையுங் கண்டு சம்பளத் திட்டம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தியிருக்கின்றனர். தலைமையாசிரியர்கள் அரசாங்க லிகிதர்களின் சம்பளத் திட்டத்தின் ஒழுங்கிற்கேற்ப ஆசிரியர்களுக்கு வேதனம் உதவவேண்டுமென யோசனை கூறியிருப்பதுடன் அதற்கான ஒரு திட்டத்தையும் சமர்ப்பித்திருக்கின்றார்கள். தலைமை ஆசிரியர்கள் தவிர ஏனைய ஆசிரியர்களின் சம்பள விகிதம் அரசாங்க லிகிதர்களின் சம்பளத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகவிருக்கவேண்டுமென அவர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர். அநேகமாக இத்திட்டம் அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுமென அரசாங்கசபைப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

**ஆகவே அரசாங்கம் ஆசிரியர்களின் சக்தியை உணர்ந்து வருகின்றதென்பது உண்மை.** வேலை நிறுத்தத்தை அரசாங்கம் ஒரு போதும் விரும்பமாட்டாது. ஆசிரியர்கள் உவந்தேற்கக் கூடிய ஒரு சம்பளத்திட்டத்தை அரசாங்கம் வெகு விரைவில் வெளியிடுமென நம்பலாம். கௌரவமான பதவி வகிப்பவர்களிடம் கௌரவமான முறையில் நடந்து கொள்வது அரசாங்கத்தின் தலையாய கடன் என்பதை ஞாபகமூட்டுகின்றேன்.

## இதுவும் மந்திர சிகிச்சையா?

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாது. தூய உள்ளம் போதும். ராம நாமங்கூடத் தேவையில்லையென்று கூறினுற்கூடத் தவறாகாது. ஆனால் நான் உள்ளத் தூய்மை யடைவதற்கு அதைத் தவிர வேறு வழியை அறியேன். அதுதான் உலக முழுவதிலும் பண்டைக்காலமுதற் பெரியோர்கள் அனுஷ்டித்துவந்த வழியாகும். அவர்கள் எல்லோரும் மூடநம்பிக்கை கொண்டவர்களுமல்லர்; மந்திரவாதஞ் செய்து பிழைத்தவருமல்லர்; கடவுள் அடியார்களேயாவர்.

"கிறிஸ்தவ விஞ்ஞானம்" என்று கூறும் நம்பிக்கைச் சிகிச்சை முறையும் இதுதான் என்று கூறப்படுமானால் எனக்கு எவ்வித ஆட்சேபமுங் கிடையாது. ராமநாமமும் நான் புதிதாகக் கண்டுபிடித்ததன்று; அது கிறிஸ்தசகாப்தத்துக்குமுன்னாலேயே யுள்ள முறையாகும்.

சத்திர சிகிச்சை வேண்டியுள்ள சமயத்திலும் ராமநாம பஜனை பயன்படுமா என்று கேட்கிறார்கள். பயன்படாது என்பதிற் சந்தேகமில்லை. அது வெட்டுப்பட்டுப்போன காலைச் சேர்த்துவிடாது. ஆனால் அநேக சந்தர்ப்பங்களிற் சத்திர சிகிச்சைக்கு அவசியமே கிடையாது. அவசியமுள்ள சமயங்களிற் செய்யவேண்டியது அவசியமே. ஆயினும் தெய்வபக்தி யுடையவர்கள் உறுப்பு இழந்தாலுஞ் சஞ்சலப்படமாட்டார்கள். ராம நாம பஜனை என்பது, இந்தச் சிகிச்சையையும் செய்து பார்ப்போமே என்று பரீட்சை பார்க்குஞ் சிகிச்சையன்று.

—தமிழ் ஹரிஜன்

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் தொண்டமானாறு **ஆறுமுகம் சிவசம்பு** அவர்களின் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | தேதி | ரூ. ச. | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 1150 | 29-4-1944 | 120-00 | தொண்டமானாறு | முத்தன் வயிரி | 1 சோடி காப்பு, |
| 1176 | 21-9-1944 | 200-00 | வல்வெட்டித்துறை, | செல்லையா மாணிக்கம் | 1 அட்டியலும் பென்டனும். |

**விற்பனவு:** நிகழும் **விய வருஷம் ஆடிமாதம் சூந் திகதி (21-7-46) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு,** எடுபட்ட நகைகள் நீங்கலாக மிகுதி, மேற்படியாரின் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பருத்தித்துறை,
20-6-46-

கா. முத்துக்குமாருஐயர்,
ஏலவிற்பனையாளர்.

## நளவெண்பாச் சுருக்கம்
உரையுடன்

புதிய பதிப்பு — விலை ரூபா 1-50

(ஆங்கில J. S. C. வகுப்புக்குரியது)

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்

# பொருட்காட்சியும் களியாட்டவிழாவும்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில்

## 1946-ம் ஆண்டு ஜுலாய்மீ 5-ந்திகதி— 15-ந் திகதிவரை

★

- இன்னிசை விருந்துகள்
- நடன நாடகங்கள்
- கதம்பக் கச்சேரிகள்
- கலாரசனை நிறைந்த கைத்தொழிற் பொருட்கள்
- விஞ்ஞான விசித்திரங்கள்
- பூமிசாஸ்திர சரித்திர சம்பந்தமான பொருட்கள்
- மெரி-கோ ரவுண்ட்
- மேல்கீழாகச் சுற்றும் ராட்டின ஊஞ்சல்
- ஆகாய கமன உல்லாச ஊஞ்சல்
- இன்னுமநேக மநேகமான கேளிக்கைகள் விளையாட்டுகள் எல்லாம் பரிபூரணமாயமைந்த

## ஒரு இந்திரவிழா என்றே சொல்லிவிடலாம்

★

## எல்லாவற்றிற்கும் ஒரு சிகரம்

## மதுரகான இசைவாணி N. C. வசந்தகோகிலம்

### அவர்களின் இன்னிசைக் கச்சேரி

18-7-46 வியாழன்
யாழ்ப்பாணத்தில்

21-7-46 ஞாயிறு
கொழும்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஜுன் 23உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.